பக்கம்: பன்னிரண்டு
விலை ரூபா 5-00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 தை 25 புதன்கிழமை ( 7-02-2001 ) தொலைபேசி: 3378 ஒலி: 50

அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
176/1, நாவலர் வீதி.
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1455)

## யாழ், மன்னார் மாவட்ட ஆயர்கள் நேற்று வன்னிப் பகுதிக்கு சென்றனர்

### புலிகளின் பிரதிநிதிகளை சந்திப்பர்

(வவுனியா)

யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகமும் மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு யோசப்பும் நேற்று வன்னிக்குச் சென்றுள்ளனர். இவர்கள் இருவரினதும் வன்னி விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

வன்னி செல்லும் இரண்டு ஆயர்களும் வன்னியில் ஒரு வார காலம் தங்கியிருந்து விடுதலைப்புலிகளின் உயர்மட்டத்தலைவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளனர். வன்னியில் புலிகளின் உயர்மட்ட தலைவர்களைச் சந்தித்து பேசுவது தொடர்பாக எமது செய்தியாளரிடம் மன்னார்

→12ஆம் பக்கம் பார்க்க்

## பொதுத்தேர்தலில் முறைகேடு அனுருத்தரத்வத்த உட்பட 12 எம்.பிகளுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

எரிபொருள் மின்சக்தி அமைச்சரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்தரத்வத்த உட்பட பன்னிரண்டு கண்டி மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர்களுக்குதேர்தலில்இடம் பெற்ற முறைகேடுகள் தொடர்பான விசாரணைக்காக நீதிமன்றத்தால் அழைப்பாணைவிடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் நடைபெற்ற கண்டி மாவட்ட பாராளுமன்றத் தேர்தலில் முறைகேடுகள், ஊழல்கள் நடைபெற்றதாகவும், இம் மாவட்டத் தேர்தல் முடிவுகளை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரியும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் காமினி ராஜபக்ஸ தாக்கல் செய்த மனு

→12 ஆம் பக்கம் பார்க்க

## ★ அரசு-புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை

# குழப்பும் முயற்சியில் ஈடுபடாதீர்கள்

# ஒத்துழைப்பு வழங்க வேண்டுகோள்

## ஐ. தே. கட்சி, ஜே. வி. பி. தலைவர்களிடம் தமிழ்த் தலைவர்கள் கோரிக்கை

(நமது அரசியல் நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோர்வேயின்முயற்சியை குழப்பியடிக்கும்எந்த விடயத்திலும்ஈடுபடாது சமாதான முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஐக்கிய தேசிய கட்சியையும், மக்கள் விடுதலைமுன்னணியையும் (ஜே.வி.பி) நேரில் சந்தித்துக் கோருவதற்கு தமிழ்க்கட்சித் தலைவர்கள் தயாராகி வருகிறார்கள்.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சியில் நடு நிலை ஏற்பாட்டாளராக ஈடுபட்டு வரும் நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல் ஹெய்மின் சமா... கம் தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு சாராரையும் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவரும் முயற்சியில் நோர்வே தொடர்ந்து வெற்றிப் பாதையில்சென்றுகொண்...

ஐக்கிய தேசியக் கட்சியும். மக்கள் விடுதலை முன்னணியும் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பியடிக்கக் கூடியவகையில் செயற்பட்டு வருவதினால் இரு கட்சித் தலைவர்களையும் பதினொரு...

## வன்னியில் பொங்கு தமிழ் எழுச்சிப் பேரணி

(வவுனியா)

கடந்த 17 ந் திகதி யாழ் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வுக்கு ஆதரவாக நேற்று வன்னிப் பெரு நிலப்பரப்பில் பொங்கு தமிழ் எழுச்சிப் பேரணியென்று இடம் பெற்றுள்ளது.

துணுக்காய் வலய பல்கலைக் கழக புகுமுகமாணவர் ஒன்லியம் ஏற்பாடு செய்த இவ் எழுச்சிப் பேரணி மல்லாவி வண்மன் விளையாட்டுக் கழக மைதானத்திலிருந்து ஆரம்பமாகி மல்லாவி மத்திய கல்லூரி மைதானம்

→12ஆம் பக்கம் பார்க்க

## ஈச்சமோட்டை பகுதியில் நேற்று கடும் சோதனை

(சுண்டுக்குளி)

ஈச்சமோட்டைப் பகுதியில் ... மணிமுதல் 6மணிவரை நீடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

னப் பேச்சுவார்த்தை முயற்சியில் நடு நிலை ஏற்பாட்டாளராக ஈடுபட்டு வரும் நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல் ஹெய்மின் சமாதான முயற்சிகளுக்கு அரசும், விடுதலைப்புலிகளும் இணக்

இரு சாராரையும் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவரும் முயற்சியில் நோர்வே தொடர்ந்து வெற்றிப் பாதையில்சென்றுகொண்டிருக்கிறது. இவ் வேளையில் பிரதான எதிர்க்கட்சியான

தைகளைக் குழப்பியடிக்கக் கூடியவகையில் செயற்பட்டு வருவதினால் இரு கட்சித் தலைவர்களையும் பதினொரு தமிழ்க்கட்சித் தலைவர்களும்

→12ஆம் பக்கம் பார்க்க

# புலிகளின் யுத்த நிறுத்தத்தை யப்பான் அரசு வரவேற்கிறது

## தமிழ் தலைவர்களிடம் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சிணை விடயத்தில் நோர்வே அரசு எடுத்துவரும் சமாதான முயற்சியை ஊக்குவித் துவருவதுடன் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பையும் வரவேற்கிறோம்.

இவ்வாறு இனப் பிரச்சினை தொடர்பாக தன்னைச் சந்தித்த தமிழ் கட்சித் தலைவர்களிடம் யப்பான் தூதுவர் சிசிரோ ஒட்சுகா தெரிவித்துள்ளார்.

யப்பான் தூதுவர் சிசிரே ஒட்சுகாவை தமிழ்த் தலைவர்கள் நேற்று சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனார்.

யப்பான் தூதுவர் தமிழ்க் கட்சி தலைவர்களிடம் மேலும் தெரிவித்திருப்பதாவது; இலங்கைக்கு உதவி

→12ஆம் பக்கம் பார்க்க

# நேற்று கடும் சோதனை

(சுண்டுக்குளி)

ஈச்சமோட்டைப் பகுதியில் இராணுவத்தினர் நேற்று பிற்பகல் கடுமையான சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இத் திடீர் சோதனை நடவடிக்கை நேற்றுப் பிற்பகல் 3 மணிமுதல் 6மேணிவரைநீடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சோதனை நடவடிக்கையின்போது சிலருடைய அடையாள அட்டைகளும் பறிமுதல் செய்யப்பட்டது வெவ்வேறு இராணுவப்பிரிவினர் பலதடவைகளா வீடுகளைக் கடுமையாக சோதனை யீட்டனர். வீடுகளில் உள்ள சமயல் அறைகளும் புகைப்போக்கிகளும், சீலிங்குகளும் சோதனைகளுக்குள்ளாகின.

இத்தகைய தீவிரசோதனை நடாத்தப்பட்ட போதும் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது

(ம-110-59)

உள்ளே . . .

- ★ யாழ் கல்வியியல் கல்லூரிக்கு தெரிவானோர் பெயர் விபரம்.
- ★ யாழ். கன்னாதிட்டி காளியம்பாள் ஆலய மகாகும்பாபிஷேக சிறப்பு மலர்.

# தனியார் மருத்துவமனை கட்டுப்படுத்த சட்டம்

(கொழும்பு)

தனியார் வைத்தியசாலையின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் வகையில் விரைவில்சட்டம் கொண்டுவரப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் டபிள்யு.டி.ஜெ. செனிவரத்தன தெரிவித்துள்ளார்.

சிலதனியார் வைத்திய சாலைகளில் அளவுக்கதிகமாசக் கட்டணங்கள் அறவிடப் படுவதாகவும்,முறைகேடுகள் இடம்பெறுவதபகவும் சுகாதாரஅமைச்சருக்கு பலமுறைப்பாடுகள் கிடைத்துள்ளன இதனையடுத்து

→12ஆம் பக்கம் பார்க்க

# விடுதலைப்புலிகளுடன் பேச்சுநடத்த அரசுதொடர்ந்து முயற்சி செய்யும்

## வெளிவிவகார அமைச்சு அறிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப்பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் முயற்சியெடுத்து வருகின்றதென வெளிநாட்டமைச்சகம் நேற்றுவெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான அரசின்முயற்சி தொடர்ந்து இடம்பெற்ற வண்ணம் உள்ளது எனினும் புலிகளுடன் அரசாங்கம் இப்போது யுத்தநிறுத்தம் எதிலும் ஈடுபடமாட்டாது.

கடந்தவாரம் கொழும்பு

→12ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## திரு விளம்பரம்

[redacted]

### விற்பனைக்கு

நல்ல நாதத்துடன் புத்தம் புதிய 22அங்குலமுடைய மிருதங்கங்கள் (பலா) முழு வேலையுடன் (3000/-) மூவாயிரம் ரூபாவுக்கு விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- கோவிந்தபிள்ளைவிஜயகுமார் 192/1 நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம்.

(2485)

### காணவில்லை

சாந்தை, சில்லாலை, பண்டத்தரிப்பு என்ற முகவரியைச் சேர்ந்த ஆறுமுகம் நாகராசா (குஞ்சன்) என்பவருடைய மாவெள்ளை, பட்டிக் கொம்பு, பெயர்க்குறி 'சோ' என்றுள்ள பசுமாட்டை (கன்று ஈனும் பருவம்) 26.01.2001 அன்று வீட்டில் இருந்து காணவில்லை. கண்டவர்கள் மேற்கூறிய முகவரிக்கு அறியத் தரவும். சன்மானம் வழங்கப்படும்.

(2503)

## நாளை கூட்டம்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் இயங்கிய கிராமஅபிவிருத்திச்சங்கங்கள் மாதர்கிராம அபிவிருத்திச்சங்கங்கள் ஆகியவற்றின்தலைவர்கள், செயலாளர்களுக்கான பொதுக்கூட்டம்நாளை வியாழக்கிழமைகாலை10.00 மணிக்கு புலோலியில் அமைந்துள்ள பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி அமைப்புக்களின் தலைவர், செயலாளர் பொருளாளர் ஆகியோர் தமதுகணக்கு அறிக்கைகளுடன் சமுகமளிக்குமாறு பிரதேசசெயலர் எஸ். புத்திசிகாமணி கேட்டுள்ளார். [ந]

## ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் உணவு விடுதி மீது இனந்தெரியாதவரால் குண்டு வீச்சு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் ஒருவரின் ஹோட்டல் ஒன்று கைக்குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகி பலத்த சேதத்திற்கு உள்ளாகியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியினரின பாதயாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கு ஆயிரம் உணவுப் பொதிகளை வழங்கியமையினாலேயே இக் ஹோட்டலுக்கு கைக் குண்டு வீசப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது

இப் பாத யாத்திரைக்காக வீதிச் சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் மீது, வாகனம் ஒன்றில் வந்த ஆயுதக் கும்பல் ஒன்று சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியினரின இப் பாதயாத்திரையைக் குழப்பும் வகையில் மேற்கொள்ளப்படும் இச் செயல்களை, பாதயாத்திரை ஒருங்கிணைப்பாளரும் ஐ.தே.க. உபதலைவருமான காமினி அத்துக்கோறள வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இப் பாதயாத்திரையை குழப்ப எத்தனை இடையூறுகள் மேற்கொள்ளப்படினும் கைவிடாது தொடர்ந்தும் பாதயாத்திரையை முன்னெடுத்துச் செல்வோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ)

## போக்குவரத்து பாதிப்பு

(லண்டன்)

பூமிக்கடியில் ஓடும் இரயில் ஓட்டுநர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தத்தின் காரணமாக நேற்று முன்தினம் லண்டன் நகரில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டிருந்ததாகவும்,

10 வீதமான ரயில்களே ஓடியதால், வீதியில் கடும் நெரிசல்கள் ஏற்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

(உ-9)

## ஹார்ட்ஹில் காலமானார்

[புதுடில்லி]

முன்னாள் இந்திய மத்திய அமைச்சரும்காங்கிரஸ்கட்சித் தலைவருமான ஹார்ட்ஹில் நேற்று தனது 71 வது வயதில் புதுடில்லியில் காலமானார், இவர் மாரடைப்பு நோயினால் கடந்த ஞாயிறன்று அகில இந்திய விஞ்ஞானக் கழக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

(உ-9)

## மத்திய கல்லூரி புனரமைப்பு மதிப்பீடு 250 இலட்சம் ஒதுக்கியது 20 இலட்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள தேசியப் பாடசாலைகளில் ஒன்றான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு ரான் அமைப்பினால் 20 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1999-2000-ம் வருடத்திற்கு தேசியப் பாடசாலைகளான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு 75 இலட்சம் ரூபாவும், வேம்படி மகளிர் கல்லூரிக்கு 50 இலட்சம்ரூபாவும், யாழ் மத்திய கல்லூரிக்கு 40 இலட்சம் ரூபாவும், சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு 30 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டு புனரமைப்பு வேலைகள் நடந்தேறியுள்ளன.

கடந்த கால யுத்த அனர்த்தங்களில் படுமோசமான முறையில் பாதிக்கப்பட்ட யாழ்.மத்திய கல்லூரியின் புனரமைப்பு வேலைகளுக்கு 250 இலட்சம் ரூபா தேவை என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் 20 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருப்பது ஆச்சரியத்தைக் கொடுப்பதாக உள்ளதென கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன.

(ம)

## ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

டொலருடன் ஒப்பிடும் போது ரூபாவின் பெறுமதி தற்போது அதிகரித்து வருவதாக இலங்கை மத்தியவங்கி தெரிவித்துள்ளது

வெளிநாட்டு நாணய விகிதப் பெறுமதிகளை முன்கூட்டியே அறிவிப்பதை ஜனவரி மாதம் 23 ஆம் திகதியிலிருந்து மத்தியவங்கி தவிர்த்ததைத் தொடர்ந்து டொலரின் பெறுமதி தற்போது தளம்பல் நிலையை அடைய ரூபாவின் பெறுமதி அதிகரித்துச் செல்வதாக வங்கியின் பிரதி ஆளுநர் டபிள்யு.ர விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

(ந-4)

## முதலுதவி பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரிவு சுகாதாரத் தொண்டர்களுக்கான முதலுதவிப் பயிற்சி வகுப்பு இன்று புதன்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்ட சென் ஜோண்ஸ்அம்புலன்ஸ் படைப் பிரிவின் இணைப்பாளர் க.அருந்தவராஜா பயிற்சி வகுப்பினை நடத்தவுள்ளார்.

(வ-5)

## இன்று தைப்பூசத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை முனியப்பர் தேவஸ்தானத்தில் தைப்பூசத் திருவிழா இன்று இடம் பெறுகிறது

யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகஸ்தரின் ஆதரவில் இடம்பெறும் இவ் விழாவில் காலை 10.00 மணிக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்று தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படும். (இ)


## புதுக்கடை திறப்பு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் தைத்திங்கள் 25ம் நாள் (07-02-2001) புதன்கிழமை (பழைய நேரம்) பிற்பகல் 05.05-6.35 மணி வரையுள்ள பூச நட்சத்திரமும், பௌணமிதிதியும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

### அலன் பான்சி கவுஸ்

265, மானிப்பாய் வீதியில் வர்த்தக நிலையத்தை திறந்து வியாபாரம் செய்ய திருவருள் பாலித்துள்ளதால், அத்தருணம் தாங்களும் வருகைதந்து சிறப்பித்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

265, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

தங்கள் இனிய நல்வரவை நாடும் சுபம் அலன்

அன்பளிப்பு-
நாதன் சைவ உணவகம்
இல. 87, மானிப்பாய் வீதி,
(வைத்தீஸ்வரா சந்தி)
யாழ்ப்பாணம்.

(கி-1468)


## ஏறாவூரில் அணைக்கட்டு உடைப்பு போக்குவரத்து துண்டிப்பு

ஏறாவூர்

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பிரதேசத்திலுள்ள மாவடி ஓடை அணைக்கட்டு உடைப்பெடுத்துள்ளதால். வேப்பவெட்டுவான், மாவடிஓடை நடியப்பொத்தானை, கொக்காஞ்சிமடு ஆகிய பிரதேசங்களுக்கான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் இப் பகுதியைச் சேர்ந்த 300பேர் தோணிகள் மூலம் அப்பகுதிகளிலிருந்து வெளியேறியுள்ளனர். (ந-4)

## இளைஞனை விடுவிக்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு களுத்துறை சிறைச்சாலையில் கடந்த எட்டு மாதங்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் வவுனியா வாசியான நீலமேகன் ஜெயகாந்தனை விடுதலை செய்யுமாறு உயர் நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்துள்ளது

கடந்த வருடம்மே மாதம் 29ஆம் திகதி வவுனியாவில் வைத்து புலிகள் இயக்க உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [ந-4]


## புதுக் கடை திறப்பு விழா

07-02-2001 இன்று

தைப்பூசத் திருநாளில்

நியூ விதுஷா நகை மாடத்தின்

இணை நிறுவனமான

★ நியூ விதுஷா நகை மாடம் ★

சுருவில்வீதி, ஊர்காவற்றுறை.

என்னும் முகவரியில் திறந்து வைக்கின்றோம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்

உரிமையாளர்:- ச. றஞ்சன்

நியூ விதுஷா நகைமாடம்
191 H. K கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1466)


யாழ்ப்பாணம்..

சுபாஸ்குபரன் காரைதீவு, 12 எஸ்.ஜெயாநந்தன் சங்கானை,

ஜி. உஷாந்தன் கொடிகாமம் பி. சுபமா சுதுமலை வடக்கு,எம். சுதாஜினி மட்டக்களப்பு, ஏ. அகிலனி உரும்பிராய் ஜீ பிரியதர்சினி சண்டிலிப்பாய் எஸ் நிருவிகா கொக்குவில், ஆர் சிவகௌரி புலோலி தெற்கு, எஸ். மேகலா கோப்பாய் மத்தி, கே. சோபனா உரும்பிராய் தெற்கு, ரி கவிதா திருநெல்வேலி, வீ. துஷ்யந்தி கல்முனை, எஸ். ஸ்ரீப்பிரியா நல்லூர், கே. அபிராமி சுழிபுரம், எஸ். திருவேணி கொக்குவில், என். சந்திரன் மூளாய் வீ. சந்திரலதா கொக்குவில்

**முக்கிய குறிப்பு:-**

மேற்படி கல்வியல் கல்லூரிக்குத் தெரிவான மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாயிலுள்ளயாழ் தேசியக்கல்வியல் கல்லூரிக்கு தவறாது தமது பொற்றோர்கள் சகிதம் வருகை தருமாறு கல்வியல் கல்லூரியின் பீடாதிபதி தி. கமலநாதன் கேட்டுள்ளார். (ந)

## கலைஅரங்க திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொட்டடி சனசமூகநிலையத்தின் கலைஅரங்கத்திறப்பு விழாஇன்று மாலை4.30மணிக்கு இடம்பெறும். நிலையத்தின் தலைவர் ஸ்ரீராஜபுலேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனனும் சிறப்புவிருந்தினராக வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் நா. வன்னியசிங்கம் யாழ்கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர்திருமதி செ.பத்மநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர். (ந)

# செய்தித் துளிகள்

## போர் ஓயும்

(யாழ்ப்பாணம்)

இன்று 7 ஆம் திகதி இரவு 9.39 மணியளவில் யுத்த காரனாகிய செவ்வாய் துலாராசியில் இருந்துவிருச்சிக ராசிக்கு இடம் பெயர்ந்து 61 நாட்கள் வரைவிருச்சிகராசியிலேயே சஞ்சரிக்கும்.

வக்கிரச் சனியின் தீயபார்வையை விட்டு செவ்வாய் நீங்கியதால்போர்தணிந்து, நாட்டில் சுமுக நிலையைத் தோற்றுவிக்கும் என ஜோதிட கணிப்புகள் தெரிவிக்கின்றன. (உ)

## செயலமர்வு

(மந்திகை)

தென்மராட்சி கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட பாடசாலைகளில் 8.11 தரங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார். (உ-23)

## பரமானந்த சாகரம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று பி.ப 2 மணிக்கு 'பரமானந்த சாகரம்' எனும் பொருள் பற்றி சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றவுள்ளார். (உ)

## தொலைபேசி சேவை துண்டிப்பு

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் கேபிள் தொலைபேசி சேவை கடந்த சில தினங்களாக துண்டிக்கப்பட்டுள்ளது

இதனால் வடமராட்சிப் பகுதியில் அமைந்துள்ள அரசதிணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் கூட்டுறவு சங்கங்களின் செயற்பாடுகள் மந்தகதியில் நடைபெற்று வருவதாகத்தெரிய வருகிறது. (உ-23

## கோப்பாயில் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

'எதிர்காலத்தில் விஞ்ஞானம்' என்ற பொருளில், நாளை வியாழக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி க பொ த (உ/த) மாணவர்களுக்கு கருத்தரங்கொன்றுஇடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் என். சிவகடாட்சம் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கருத்தரங்கில் சுவாமி சித்ரூபானந்தா பங்கு கொள்கிறார். (உ)

## உதை பந்தாட்ட விருத்திச் செயற்பாடு

[கரணவாய்]

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கம் வடமராட்சிப் பகுதியில் உதைபந்தாட்டத்தை வளர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அதன் முதல் கட்ட நடவடிக்கையாக இப்பிரதேசத்திலுள்ள உதைபந்தாட்டத்தில் ஈடுபடும் கழகங்களை சுய்மோடு இணைக்கும் முயற்சியில் மேற்படி சங்கம் ஈடுபட்டுள்ளது. [உ-27]

## கட்டட திறப்பு

(ஈச்சமோட்டை)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில், கணனி செயற்பாட்டறை, நூல் நிலையம் என்பன உள்ளடங்கிய புதிய கட்டடத் தொகுதி ஒன்று நாளை வியாழக்கிழமை திறந்து வைக்கப் படவுள்ளது. (உ-59)

## கட்டட திறப்புவிழா

[மண்கும்பான்]

யா/மண்கும்பான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை புனர் நிர்மாணம் செய்யப்பட்ட கட்டடத் திறப்புவிழா இன்று மு.ப 10 மணிக்கு அதிபர் க. குமரேஸ்வரநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது

இத்திறப்புவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் மற்றும் கௌரவ விருந்தினர்களாக வேலணை பிரதேச செயலர் செ. இரத்தினம், ஈ.பி.டி.பி யா/மாவட்ட அமைப்பாளர் ந. மதனராசா, வேலணை பிரதேச சபைத் தலைவர் த. கருணாகரகுருமூர்த்திஆகியோர் கலந்து கொள்கின்றனர். [உ-11]

## சமாதான நீதிவான்

(ஈச்சமோட்டை)

வட்டுக்கோட்டை மூளாய் வீதியைச் சேர்ந்த சிவகுருநாதர் இராமச்சந்திரா யாழ் மாவட்ட சமாதான நீதவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் சிறந்த சமூக சமய சேவையாளரும் கூட்டுறவாளரும், குபேக்கோ, ஷப்றா போன்ற நிறுவனங்களில் கடமையாற்றி ஓய்வுபெற்றவருமாவார். (உ-59)

## ஊசி மருந்துகள் அனுப்பிவைப்பு

[மந்திகை]

பருத்தித்துறை அரசினர்ஆதாரவைத்திய சாலைக்கு ஊசி மருந்துகள் சுகாதாரதிணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி எஸ் கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

நீண்ட காலமாக பற்றாக்குறையாக இருந்தவிசர்நாய்க் கடி மருந்து (ஏ ஆர் வி). ஏற்புத்தடுப்பு ஊசி மருந்து, பென்சிலின் ஊசி மருந்து, பாம்புக்கடி மருந்து ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டவையாகும்.

அதே வேளை மருந்து கட்டுவதற்கு பயன் படுத்தப்படும் பண்டேஜிற்குதொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது [உ-23]

## சட்டவிரோத மதுவிற்பனை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியை சேர்ந்த மது விற்பனையாளர் ஒருவர், தென்னை பனைவள அபிவிருத்தி சங்கத்தில் பதிவு செய்யப்படாதுசட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனை செய்தார் என்னும் குற்றச்சாட்டின் பெயரில் யாழ்ப்பாணம் நீதிமன்றினால் ஆயிரத்து 500 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது (உ-6)

## தைப்பூசத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் அருள்மிகு ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் ஆலய தைப்பூசத் திருவிழா இன்று பி.ப 4.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. (உ-6)

## செயற்பாட்டு அறை

(ஊர்காவற்றுறை)

யா/ஊர்காவற்றுறைசிறிய புஸ்ப மகளிர்வித்தியாலயத்தில்அண்மையில்ஆரம்பக் கல்விச் செயற்பாட்டறை திறந்து வைக்கப்பட்டது. (உ-75)

# திருட்டுக்களை தடுக்க உதவுமாறு படை அதிகாரிகளுக்கு மகஜர்

## தென்மராட்சி மக்கள் கையளித்தனர்

(தென்மராட்சி)

நீர்வேலி தரவையூடாக கைதடி நுணாவில், மட்டுவில் மற்றும் கைதடி பகுதிகளுக்கு அனுமதியின்றிச் செல்பவர்கள் அங்கு ஆட்களில்லாத வீடுகளில் கைவிடப்பட்டு வந்த பொருட்களை தம்மிஷ்டம் போல சூறையாடி வருகின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்தும் வகையில் பாதுகாப்புப் படையினர் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் எனக் கோரும் மகஜர் ஒன்றினை கைதடி நுணாவில் பகுதி மக்கள் 52 பேரின் கையொப்பங்களுடன் வரணியிலுள்ள பாதுகாப்புப் படையின் அதிகாரியிடம் கையளித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தென்மராட்சி மக்களின் சொத்துக்கள் எல்லாம் அழிந்தது மட்டுமன்றி எஞ்சியவையும் சூறையாடப்பட்டு வருவது வேதனைக்குரியது.

எனவே படைத்தரப்பினர் இது விடயத்தில் உரிய நடவடிக்கைகளை எடுத்து மக்களால் மீதமாக விடப்பட்டு வந்த பொருட்கள் திருடப்பட்டு வருவதைத் தடுத்து நிறுத்த ஆவன செய்யும்படி அம்மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

மேலும் இது விடயம் தொடர்பாக இப்பகுதி மக்கள் தென்மராட்சி பிரதேச செயலர் மற்றும் கிராம சேவையாளர்களையும் சந்தித்து நிலைமையை விளக்கியுள்ளதாயும் தெரியவந்துள்ளது. (உ-77)

## இராசி பலன்

7-2-2001

(தை 25, புதன்)

சதுர்த்தி பி ப 3.58 வரை
பூசம் மு.இ 10 21 வரை
ராகுகாலம் 12.35- 2 05 - வரை
சுபநேரம் 5-05- 6 35 வரை
சித்தம், தைப்பூசம், பூரணை விரதம்.

**மேடம்**
மனப்பதட்டம், பயந்த சுபாவம், காரிய தாமதம், அரச நன்மை.

**இடபம்**
பிரயாணம், அன்னியர் சந்திப்பு, வாக்கு சித்தி, முயற்சி வெற்றி.

**மிதுனம்**
வாக்குக் கலகம், கௌரவக் குறைவு, தனவிரயம், முயற்சி தாமதம்.

**கடகம்**
தெய்வ சிந்தை, மதிக்கப் படுதல், சயன சுகம், காரியம் கைகூடும்.

**சிங்கம்**
பிரயாணம், கோபப்படுதல், பொருள் விரயம், முயற்சி மந்தம்.

**கன்னி**
கௌரவம், தனலாபம், நண்பர் சந்திப்பு, குடும்ப சுகம்.

**துலாம்**
முயற்சி கைகூடும், தொழில் லாபம், ரோகம், அதிகாரிகள் சந்திப்பு.

**விருச்சிகம்**
பிரயாணம், உடல் நலக் குறைவுஎதிர்பாராதநன்மை, நிலைக்கேடு.

**தனுசு**
தேவையற்ற பிரச்சினை, பிரயாணம், காரியதாமதம், வியாதி.

**மகரம்**
உஷ்ண ரோகம், போசன சுகம், சுவாரஸ்யம், பிரயாணம்.

**கும்பம்**
சுயமுயற்சி, பகைவர்விலகுவர், காரியம்கைகூடும், தன வரவு.

**மீனம்**
தாழ்வு நிலை, அமைதிக் குறைவு, குடும்பக் கவலை, வியாதி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## சாவ. இந்துவின் தாபகர் தின நிகழ்வுகள் இரு கல்லூரிகளில்

(சங்கானை)

யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் தாபகர் தினம் இம்மாதம் 5ஆம் திகதி திங்கட்கிழமை கல்லூரி அதிபர் கைலைநாதன் தலைமையில் நடைபெற்றது.

இடப்பெயர்ந்து தற்காலிகமாக இயங்கும் இணுவில் மத்திய கல்லூரிமண்டபத்தில் பி.ப 3 மணியளவில் இடம் பெற்ற இந்நிகழ்வில், கல்லூரியின் முன்னைநாள் அதிபர் க சந்திரசேகரா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதே வேளை, மேற்படி பாடசாலை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் இயங்கி வருவதனால் அங்கும் தாபகர் தினம் கொண்டாடப்பட்ட தாய் தெரியவந்துள்ளது [உ-ப 18]

## வளர்ப்பு மிருகத்தை பழிதீர்த்த மனிதன்

(கொழும்பு)

மனிதனை மனிதன் பழிவாங்கும் இக் கலியுகத்தில் மிருகத்தை மனிதன் பழிவாங்கிய சுவாரஷ்ய சம்பவம் ஒன்று அண்மையில் கலகெதர பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கலகெதர கிராமத்து வீடொன்றில் வளர்க்கப்படும் பெண் நாய் ஒன்று அவ் வீதிவழியால் சென்றுகொண்டிருந்த நபரை கடித்து ஆடையைக் கிழித்து விட்டது.

இதனால் ஆத்திரமுற்ற அந்த நபர் அரிவாளால் அப்பெண் நாயின் தலையை வெட்டிச் சென்றுள்ளார்

சமீபத்தில குட்டிகளை ஈன்றுள்ளமையால், தன் குட்டிகளைப் பாதுகாக்கும் பொருட்டு வீட்டிற்கு அருகில் போவோர் வருவோரை கடிக்க முற்படுவது சாதாரண வழக்கமாக இருந்துவந்தமை குறிப்பிடத்தக்கது (செ)

## மோசடி புரிந்த ப. நோ. கூ. ச. ஊழியர் இருவர் இடைநிறுத்தம்

(மந்திகை)

நிவாரண விநியோகத்தின் போது பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட பொருட்களின் நிறைகளில் மோசடி செய்த கூட்டுறவு ஊழியர்கள் இருவர் மீது 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் அவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்தவாரம் நிவாரணப் பொருட்கள் விநியோகம் செய்துகொண்டிருந்தவேளை கொடிகாமம் பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிளைகளுக்கு விஜயம் செய்த கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் தலைமையிலான குழு இம் மோசடியை கண்டறிந்ததையடுத்து கடமையிலிருந்த முகாமையாளர், விற்பனையாளர் ஆகிய இருவர் மீது 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் அவர்களை தற்காலிகமாக வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். (உ-23)

## பாஷையூர் மக்கள் மீளக் குடியமர அனுமதி

(ஈச்சமோட்டை)

பாஷையூர்ப் பகுதியில் மக்கள் மீளக் குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளதை அடுத்து ஓரளவு மக்கள் அப்பகுதியில் குடியமர ஆரம்பித்துள்ளனர்.

கடந்தகால போர் அனர்த்தங்களினால் யாழ் நகரில் கரையோரப் பகுதியில் மக்கள் இடம்பெயர்ந்தபோது இப்பகுதி மக்களும் முற்றாக இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் தங்கியிருந்தமை தெரிந்ததே.

தற்போது இப்பகுதியில் குடியமர படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதிலும் கடற்கரை வீதிப்பகுதியும் புனித அந்தோனியார் வீதிப்பகுதியும் குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்படாத பகுதிகளாகவே காணப்படுகின்றன.

இதேவேளை, பாஷையூர் சென் அன்ரனீஸ் பாடசாலை கடந்த திங்கள் முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

இருப்பினும் மாணவர் வரவு மிக மந்தமாகவே காணப்படுவதாகவும் தெரியவந்துள்ளது

பொதுச் சந்தையின் பணிகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெற்று வருகின்றன. (உ-59-110)

## ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக வீட்டில் கசிப்பு வைத்திருந்தார் எனக் குற்றம் சாட்டப்பட்ட உரும்பிராய்ப்பகுதி குடும்பப் பெண் ஒருவருக்கு யாழ் நீதி மன்றம் ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது (உ-6)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல - 03

## ஆக்கம்: செல்வி

★ பின்வரும் சொற்களின் ஒத்த கருத்துள்ள சொல்லை எழுதுக.

1. கோகுலம்
2. மயூரம்
3. குஞ்சரம்
4. அஞ்சுகம்
5. அசுவம்

★ பின்வரும் சொற்களின் பெண்பாற் சொல்லை எழுதுக.

6. உத்தமன் — — — — — — — — —
7. குயவன் — — — — — — — — — —
8. குரு — — — — — — — —
9. கொழுநன் — — — — — — — — — —
10. தபுதாரன் — — — — — — — — — —

★ பின்வரும் சொல் வரிசையில் பொருந்நாத சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

11. பவளம், முத்து, மாணிக்கம், வச்சிரம்
12. தினகரன், ஞாயிறு, கதிரவன், திங்கள்
13. தென்னை, மா, பனை, கமுகு
14. மல்லிகை, முல்லை. செவ்வந்தி, நந்தியாவர்த்தம்
15. மீன், றால், ஆமை, நண்டு

★ பின்வரும் சொற்களை வைத்து இடைவெளியை நிரப்புக.

செவ்விந்தியர்கள், பனிக்கட்டியினால்மண்புழு, புதன், வானவில்

16. — — — — — — — — — ஏழு நிறங்களைக் கொண்டது:
17. — — — — — — — — புவிக்கு அண்மையில் உள்ளது.
18. அவுஸ்திரேலியாவின் பூர்வீக குடிகள் — — — — — — — — — — — — — — ஆவர்.
19. — — — — — — விவசாயிகளின் தோழன் ஆகும்:
20. எஸ்கிமோவர்களின் குடிசை — — — — — — — — — — — ஆனது?

★ பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்ப் பதத்தை எழுதுக.

21. ELEPHANT — — — — — — — —
22. SKYLARK — — — — — — — — — —
23. TELEVISION — — — — — — — — — —
24. HOSPITAL — — — — — — — — — —
25. VILLAGE — — — — — — — — — —
26. ஒரு ஆரஞ்சுப்பழத்தை 10 ரூபாவிற்கு விற்று 2 ரூபா இலாபம பெறும் வியாபாரி ஒரு நாளில் 100 ரூபா இலாபம் பெற்றால் அவன் எத்தனை ஆரஞ்சுப் பழங்கள் விற்றான்?
27. ஒரு தீப்பெட்டியில் 43 தீக்குச்சிகள் உள்ளன. 7 தீப்பெட்டிகளில் உள்ள தீக்குச்சிகளின் எண்ணிக்கை யாது?
28. ஒரு கிலோ சீனியின் விலை 35.00 எனின் 245 ரூபாவிற்கு எத்தனை கிலோ சீனி வாங்க முடியும்?
29. ஒரு மீற்றர் எத்தனை சென்ரி மீற்றர்?
30. ஒரு கிலோ எத்தனை கிராம்?

குறிப்பு:-

விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும்.

இதற்கான விடைகளை 12-02-2001 இற்கு முன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

### கல்விப் பகுதி
### வினா இல: 42

"வலம்புரி"

இல: 15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்; ..............................

சொந்த முகவரி; ..............................

கற்கும் பாடசாலை ; ..............................

மாணவர் கையொப்பம் ; ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

## புலமைப் பரீட்சை வினா இல-02 விடைகள்

01) சேய்மை
02) அவலட்சணம்
03) வன்மை
04) வெக்கை
05 குழப்பம்
06) சாவகச்சேரி
07) நிரஞ்சனா
08) 2
09) வேம்பு
10) சடல்
11) l/ml
12) M/CM
13) g/Kg
14) M
15) இரும்புச்சட்டம்
16) இலங்கை
17) இங்கிலாந்து
18) 1000.00 ரூபா
19) Aeroplane
20) University
21) 1, 3, 7, 9, 11
22) 1, 2, 3, 7, 11
23) 1, 4, 9
24) 3000
25) லீப் இலை

## புலமைப் பரீட்சை வினா இல-02

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்.

01) கு. கஸ்தூரி, சாவ: இந்து ஆரம்பப்பாடசாலை
02) ச. பிரவீணா, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
03) ர. தீபனா, தேவரையாளி இந்துக்கல்லூரி
04) த நந்தகோபி, சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
05) க. நிரோஜினி, புனித. மரியாள் வித்தியாலயம்
06) ம கஸ்தூரி, மானிப்பாய் கோதிவேம்படி
07) ப. தாமரா, யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை
08) ந. சுஜானி, சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்
09) சி. லகீசன், ஆனைக்கோட்டை சென்ரான்ஸ்
10) ச சுதாகரன், உரும்பிராய் சைவப்பிரகாச வித்தியாசாலை
11) த. சுவேந்திரன், வட்டு. மத்தியகல்லூரி
12) அ. கடோத்கஜனி, யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை
13) கு. ராஜாராம், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
14) வி. மிதிலா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
15) சி பிரணவன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
16) ந அனோறினி, யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை
17) ஆ. யோகினி, நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி
18) த. நிலஜா, யாழ். இந்துமகளிர் ஆரம்பப்பாடசாலை
19) செ. பிரதீபன், யாழ். பரியோவான் கல்லூரி
20) ம. ஷாளினி, வட. இந்துமகளிர் கல்லூரி
21) ம. மாதங்கி, துன்னர்லை காசிநாதர் வித்தியாலயம்

## காந்திஜி வி.க. வெற்றி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான எல்லே சுற்றுப் போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகம் சம்பியன் ஆனது.

மேற்படி போட்டிக்கு நடுவர்களாக ஊர்காவற்றுறை விளையாட்டு உத்தியோகத்தர் அ. வசந்தன், ரி. கிறிஸ்ரியன்சன் ஆகியோர் கடமையாற்றினார்கள். [உ–75]

## 47 வருடங்களில் 42,900 பேருக்கு கண்தானம்

(கொழும்பு)

இலங்கையின் 53வது சுதந்திர தினத்தை முன்னிட்டு யப்பான் மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் உள்ள கண் பார்வையற்றவர்களுக்கு இலங்கை அரசு கண்களைத் தானமாக அனுப்பிவைத்துள்ளது.

இலங்கை கண் தானம் வழங்கும்சங்கம் இதற்கானஏற்பாடுகளைச் செய்திருந்தது. 1954ம் ஆண்டு முதல் 62 நாடுகளைச் சேர்ந்த 42 ஆயிரத்து 900 பேருக்கு இலங்கை கண்களைத் தானமாக வழங்கியுள்ளது.

1954 இல் சிங்கப்பூருக்கு ஆறுகண்களை இலங்கைமுதன் முதலாக தானமாக அனுப்பி வைத்தது. கண் தானம் வழங்குவதை பௌத்த மதத்தவர்கள் பெரும்தர்மமாகக் கருதுவதும் இங்கு நோக்குதற்குரியது. (ந-5)

## முஸ்லிம் காங்கிரஸ் தலைமை ரவூப் ஹக்கீமுக்கே கட்சி உயர்பீடம் முடிவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைமைப் பீடத்தில் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலமை தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அதியுயர் பீடம் நேற்றுக்முன்தினம் கொழும்பில்கூடி ஆராய்ந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகமான ''தலுசலாமில்'' கூடியாராய்ந்த கட்சியின் அதியுயர் பீடம், தேசிய ஐக்கிய முன்னணிக்கு தலைவியாக அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப்பையும், முஸ்லிம் காங்கிரசின் தலைவராக அமைச்சர் ரவூப் ஹக்கீமையும் தெரிவு செய்துள்ளதாக பிந்திக் கிடைத்த தகவலொன்று தெரிவிக்கிறது

மேற்படி தீர்மானம் எதிர்வரும் 11ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள முஸ்லிம் காங்கிரசின் பேராளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டு கட்சிக்குள் நிலவும் தலைமைப் பதவிக்கான இழுபறி நிலைக்கு தீர்வு காணப்படுமென்றும் முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## குருநகர்ப் பகுதியில் கைவிடப்பட்ட காவலரண் மக்கள் பெரும் சிரமம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியை அண்டிய சேமக்காலைச் சந்தியில் அமைந்துள்ள கைவிடப்பட்ட காவலரணினால் பொது மக்கள் பெரும் இடைஞ்சல்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

மிக நீண்ட நாட்களாக கவனிக்கப் படாது குருநகர் சந்தியில் பெரும் பகுதியை ஆக்கிரமித்திருக்கும் இக் காவலரணினால் போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சல்கள் ஏற்படுவதோடு அப்பகுதியில் பற்றைகள் நெருக்கமாக வளர்ந்து, நுளம்புகளினதும் விஷஜந்துகளினது வாழ்விடமாக மாறியுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் கஷ்ரங்களை எதிர் நோக்குகின்றனர்.

இதேவேளை இப்பகுதியை அண்மித்த பகுதியிலேயே குருநகர் வைத்தியசாலை இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-59)

## நவாலி வடிசாலையில் மதுசார உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினால் நடத்தப்படும் நவாலியிலுள்ள வலிகாமம் வடிசாலை, பருவகால மதுசார உற்பத்திக்காக இம்மாதம் 3 ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பித்துள்ளதாக மேற்படி கொத்தணியின் தலைவர் நா. கணேசன் தெரிவித்துள்ளார்.

மேற்படி வடிசாலை இயங்க ஆரம்பித்ததையடுத்து அங்கத்துவ சங்கங்களின் கிளைகளில் விற்பனை போக மீதமாக நிலத்தில் வீணே ஊற்றப்பட்டு வந்த பனங்கள் பயன்படுத்தப்பட ஏதுநிலை ஏற்பட்டுள்ளது. (உ)

## இளம்பெண்ணை கத்தியால் குத்திய மதுவெறியர் தப்பிஓட்டம்

(ஆவரங்கால்)

வீட்டில் தனித்திருந்த பெண்பிள்ளையை மது வெறியில் சென்றவர் கத்தியால் குத்திய சம்பவம் அண்மையில் கோப்பாய் மத்தி வெள்ளெருப்பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் நடைபெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட நபர் தப்பியோடிவிட்ட போதிலும் பொலிஸாருக்கு கொடுத்த தகவலின் பேரில் பொலிஸாரினால் தற்போது தேடப்பட்டு வருவதாகவும்,

பாதிக்கப்பட்ட பெண் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. (உ-57)

## 96இலட்சம் செலவில் புனரமைப்புத் திட்டங்கள் காவலூரில் நடைமுறை

(மண்டைதீவு)

ஊர்காவற்றுறைப்பிரதேச செயலர் பிரிவில் கடந்தஆண்டில், மேற்படி பிரதேச சபையால் 96இலட்சம் ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாய் பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிதியில் தண்ணீர் தாங்கியுடனும் பெட்டியுடனும் கூடிய உழவு இயந்திரம் 16இலட்சம் ரூபாவிற்குகொள்வனவு செய்யப்பட்டமையும் 35இலட்சம் ரூபா செலவில் பொதுச் சந்தை புனரமைப்பு செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ- 11)

# இளைஞர் யுவதிகளின் மொழித்திறன் விருத்திக்கு தே. இ. சே. ம. ஏற்பாடு

(ஈச்சமோட்டை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் இளைஞர் யுவதிகளுக்கான மொழியியல் திறனை விருத்தி செய்யும் வேலைத்திட்டத்துக்கமைய யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் தனது நடவடிக்கைகளை துரிதமாக ஆரம்பிக்கவுள்ளது.

ஆறு இடங்களில் நடைமுறைப் படுத்தவுள்ள இப் பயிற்சிநெறி ஆறுமாத பயிற்சிக்காலத்தை உள்ளடக்கியுள்ளதோடு முற்றிலும் இலவசமானதுமாகும்:

இதில் மிகப் பிரதானமாக ஆங்கில நெறி பயிற்றப்படவுள்ளது.

பருத்தித்துறை, பளை பிரதேச செயலர்பிரிவு யாழ்ப்பாணம், நல்லூர், ஊர்காவற்றுறை உடுவில், சண்டிலிப்பாய் ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள இத் திட்டத்துக்கென தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால் 72 ஆயிரம் ரூபா நிதிஒதுக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 300 மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளவிருக்கும் இப் பயன்தர பயிற்சிநெறிக்கு 17 வயது முதல் 29 வயது வரையான இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

இது சம்மந்தமாக விபரங்களைப் பெறவிரும்பும் இளைஞர்யுவதிகள் யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் அலுவலகத்துடனோ அல்லது அவ்வப் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர்களுடனோ தொடர்புகொள்ளும்படி யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் தி. சிவதட்சணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## இளைஞர் இருவர் கைது

[யாழ்ப்பாணம்]

கடந்த 2 ஆம் திகதி திருமண வீட்டிற்குச் சென்ற வேளை கல்வியங்காட்டுப்பகுதியில் வைத்து இரு இளைஞர்களை படையினர் கைது செய்திருப்பதாக உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அருமத்துரை விமலதாஸ் [வயது-20 புதிய செம்மணி வீதி ஆனந்தபுரம்] மருதப்பிள்ளை றேமன் [வயது-20 ஊர்காவற்றுறை கிவன் கோயிலடி] ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவரது கைதுகள் தொடர்பாக பற்றுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது. [உ-12]

## இன்று கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி இருப்பை மூலை அருள்மிகு சித்திவிநாயகப்பெருமான் திருக்கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேக கிரியைகள் இன்று நடைபெறும். (உ)

## பூரணை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இன்று புரணை தினத்தை ஒட்டி அகிலஇலங்கை திருமுறைமன்றத்தினால் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலில் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் அகத்தியர் தேவாரத்திரட்டு ஓதும்நிகழ்வு இடம்பெறும்.

## தொடரும் மழையால் டெங்கு பரவும் அபாயம்

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக டெங்குக் காய்ச்சல் பரவும் ஏதுநிலை அதிகரிக்கக்கூடுமென்றுசுகாதார அமைச்சு வட்டாரங்கள் பொது மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன:

இதையடுத்து டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்பின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் தீவிர நடவடிக்கைகள்முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த வாரம் மட்டும், 250 பேர் டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. (உ-7)

# தமிழர்களைப் பாதிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டாம்

(கொழும்பு)

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் சந்தர்ப்பத்தை பாதிக்கும் வகையில் நடவடிக்கை எதனையும் எடுக்க வேண்டாம்:

திருகோணமலையிலிருந்து நூறு முன்னணிப் பிரஜைகள் கையொப்பமிட்டு பிரிட்டிஷ் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜர் ஒன்றிலேயே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது:

திருகோணமலையைச் சேர்ந்த அரசசார்பற்ற நிறுவனங்கள், தொழிற் சங்கங்களின் சட்டத்தரணிகள், டாக்டர்கள, சமாதான நீதிவான்கள் ஆகியோருடன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரும் திருகோணமலையின் முன்னாள பாராளுமன்ற உறுப்பினருமான இரா சம்பந்தனும் இம் மகஜரில் கையொப்பமிட்டுள்ளனர்.

இம் மகஜரின் பிரதி ஒன்று கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதுவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகத் துன்பம் அனுபவித்து வரும் தமிழர்களின் பிரச்சினைதீரக் கூடிய தத்தில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதனால் அவ் வாய்ப்பை பாதிக்கக் கூடியதான நடவடிக்கை எதனையும் பிரிட்டிஷ் அரசு எடுக்கக் கூடாது என வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம் எனவும் அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)

## பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

புண்ணிய நாச்சியம்மையார் நினைவு தினத்தையொட்டி யாழ். சைவபரிபலன சபை நடத்தும் பாடசாலை மட்ட பண்ணிசைப் போட்டி இம் மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைமு ப 9.00 மணியளவில்வண்ணார்பண்ணை நாவலர்மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் இம் மாதம் 19 ஆம் திகதி மு.ப 10.00 மணியளவில் நீராவியடி நாவலர் ஆச்சிர மண்டபத்தில் இடம்பெறும். (உ)

## வாசிகசாலை அமைப்பு

(ஈச்சமோட்டை)

மூளாய் வீதியில் உள்ள ஸ்ரீகணேச வாசிகசாலைக்கு புதிய கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது:

இவ் வேலைத்திட்டத்திற்கு இரண்டு இலட்சம் நிதி தேவைப்படும்என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந் நிதியை அவ்வூர் மக்களிடம் நன்கொடை அடிப்படையில் சேகரிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (உ-59)

## நிவாரண விநியோகம்

[ஆவரங்கால்]

வலிகிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் தை மாதத்திற்கான உலர் உணவு நிவாரணம் கடந்த சனிக்கிழமை முதல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகிறது: [உ-57

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

இம் மாதம் 03 – ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 178732 ஏ | 178732 பி |
| 179182 ஏ | 176344 ஏ |
| 179344 பி | 179344 சி |
| 179344 டி | 179370 ஏ |

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 179616 ஏ | 179616 பி |
| 179616 சி | 179616 டி |

### கரவெட்டி

| | |
|---|---|
| 170675 ஏ | 151753 ஏ |
| 162446 ஏ | 162446 பி |
| 162446 சி | 165010 ஏ |
| 165283 ஏ | 165284 ஏ |
| 167962 ஏ | 167962 பி |
| 167962 சி | 172457 ஏ |
| 172457 பி | 177825 ஏ |
| 177890 ஏ | 180403 ஏ |
| 180491 ஏ | 180574 ஏ |
| 180574 பி | 180574 சி |
| 180574 டி | 180574 ஈ |
| 181058 ஏ | 181135 ஏ |
| 181152 ஏ | 181152 பி |
| 181372 ஏ | 181373 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 153531 ஏ | 153531 பி |
| 153531 சி | 153531 டி |
| 162700 ஏ | 162700 பி |
| 162700 சி | 163767 ஏ |
| 168342 ஏ | 171103 ஏ |
| 173201 ஏ | 173201 பி |
| 173218 ஏ | 173218 பி |
| 173349 ஏ | 173349 பி |
| 173350 ஏ | 173350 பி |
| 173358 ஏ | 173358 பி |
| 174209 ஏ | 174209 பி |
| 177293 ஏ | 177293 பி |
| 177412 ஏ | 177412 பி |
| 177412 சி | 177412 டி |
| 177413 ஏ | 177413 பி |
| 177413 சி | 177436 ஏ |
| 177471 ஏ | 177471 பி |
| 177471 சி | 177487 ஏ |
| 177488 ஏ | 177488 பி |
| 179516 ஏ | 179519 ஏ |
| 179586 ஏ | 179586 பி |
| 179593 ஏ | 179613 ஏ |
| 179613 பி | 179613 சி |
| 179632 ஏ | 179632 பி |
| 179639 ஏ | 179639 பி |
| 179640 ஏ | 179679 ஏ |
| 179679 பி | 180614 ஏ |
| 180632 ஏ | 180632 ஏ |
| 180632 பி | 180632 சி |
| 180645 ஏ | 180667 ஏ |
| 180667 பி | 180671 ஏ |
| 180671 பி | 180671 சி |
| 180676 ஏ | 180676 பி |
| 180682 ஏ | 180683 ஏ |
| 180683 பி | 180696 ஏ |
| 180711 ஏ | 180857 ஏ |
| 180857 பி | 180857 சி |
| 180857 டி | 180866 ஏ |
| 180875 ஏ | 180879 ஏ |
| 180910 ஏ | 180910 பி |

### நல்லூர்

| | |
|---|---|
| 174018 ஏ | 174018 பி |
| 179533 ஏ | 179557 ஏ |
| 179558 ஏ | 179597 ஏ |
| 179597 பி | 179597 சி |
| 179598 ஏ | 179598 பி |
| 179598 சி | 179598 டி |
| 179599 ஏ | 179599 பி |
| 179599 சி | 179602 ஏ |
| 179602 பி | 179633 ஏ |
| 179633 பி | 179635 ஏ |
| 179635 பி | 173113 ஏ |
| 179120 ஏ | 179120 பி |
| 179120 சி | |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 156890 ஏ | 156891 ஏ |
| 151529 ஏ | 151529 பி |
| 167221 ஏ | 169937 ஏ |
| 176464 ஏ | 176464 பி |
| 176490 ஏ | 177668 ஏ |
| 177668 பி | 177880 ஏ |
| 177904 ஏ | 180452 ஏ |
| 180455 ஏ | 180455 பி |
| 180512 ஏ | 181057 ஏ |
| 181057 பி | 181127 ஏ |
| 181127 பி | 181230 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 175013 ஏ | 176694 ஏ |
| 176951 ஏ | 176951 பி |
| 179003 ஏ | 179003 பி |
| 179349 ஏ | 179349 பி |
| 179412 ஏ | 179501 ஏ |
| 179501 பி | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 179623 ஏ | 173109 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 179617 ஏ | 179634 ஏ |
| 179648 ஏ | 179648 பி |
| 179662 ஏ | 179663 ஏ |
| 179677 ஏ | 181468 ஏ |
| 175811 ஏ | 175811 பி |
| 175811 சி | 179225 ஏ |
| 179225 பி | 179225 சி |
| 179380 ஏ | 179460 ஏ |
| 179460 பி | 179497 ஏ |
| 181461 ஏ | 181461 பி |
| 181461 சி | |

திருக்குட முழுக்குக் காணும்
கன்னாதிட்டி காளிஅம்மா சரணம்!

புதுக்கடை திறப்புவிழா

07-02-2001 இன்று தைப்பூசத் திருநாளில்
நான்காவது அகவையில் காலடி எடுத்து வைக்கும்
சாரங்கா நகைமாடத்தின்

இணை நிறுவனமான
சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்

45, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரியில்

இன்று மாலை 05 மணி முதல் 6 மணி வரையிலான சுபவேளையில் திறந்து வைக்கின்றோம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கின்றோம்.

மு. குறிப்பு: எமது ஸ்தாபனத்தில் இன்று 7.2.2001 தொடக்கம் எதிர் வரும் 7.3.2001 வரை விசேட விலைக்கழிவு வழங்கப்படும் என்பதையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்

சாரங்கன் நகைமாடம் அன் சென்ரர்
45, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
(கி-1465)

கன்னாதிட்டி காளியம்பாள் கும்பாபிஷேகம் சிறப்புற
அன்னைதாள் பணிகின்றோம்

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில் 22 கரட் தங்கத்தில்
செய்து கொடுக்கப்படும் தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்

சிறி நதியா நகை மாடம்

2 G ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை-
56, கஸ்தூரியார் வீதி, (கி-1467) யாழ்ப்பாணம்.



# யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளியம்பா
# மஹாகும்பாபிஷேக சிறப்புமலர்

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

**மகா நதி ஜுவல்லறி**

**தங்கப் பவுண் நகை வியாபாரம்**

72 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(கி - 430)

அழகிற்கு அழகு செய்யும் அழகிய
தங்கப் பவுண் நகைகளுக்கு

**நதியா ஜுவல்லறி**

(ஸ்ரான்லி வீதிச் சந்தி)

2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[கி - 1429]

சுத்தமான, சுவையான, ஐஸ்கிறீம் மற்றும்
குளிர்பான, சிற்றுண்டி வகைகளுக்கும்
சிறந்த இடம்

**நியூ சாந்தி கபே அன்ட் கூல்பார்**

73, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.

(கி1426

அழகு வனிதையரின் அழகுக்கு அழகு சேர்க்கும்
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு
சிறந்த ஸ்தாபனம்

**கணேசா நகையகம்**

**கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**கணேசா நகையகம்**
பஜார் வீதி,
வவுனியா.

(கி - 1433)

**கணேசா நகையகம்**
124, செட்டித்தெரு,
கொழும்பு-11

## ஊழ்வினைகள்

## காளி அம்பாள்

யாழ்ப்பாணம் வண்ணை நகர் ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோவில் ஏறத்தாழ கி. பி 1774 ஆம் ஆண்டளவில் தமிழ் நாட்டில் இராஜதானியாக விளங்கிய தஞ்சாவூர் எனும் பேரூரில் இருந்து அழைத்து வரப்பட்ட விஸ்வப் பிராமண குலத்திலகமான வேத சாஸ்திர சிற்ப சஸ்திர விற்பன்னர் பிரம்ம ஸ்ரீ சண்ணாயிரஸ்தபதியார் அவர்களால் வடிவம் பெறத் தொடங்கியது. இந்த காலகட்டத்தில் இவரும் இவருடைய சிஷ்யர்களும் தங்குவதற்காக கோவில் அமையும் இடத்துக்கு முன்பக்கமாக அமைந்துள்ள கன்னாதிட்டி வீதியில் அடியார்க்கு நல்லான் மடத்தலையென்னும் சோழ மந்திரியின் பெயரல் அமைக்கப்பட்டிருந்த, முக்கியத்துவம் வாய்ந்த தடாகக் கரையில் விடுதி அமைக்கப்பட்டிருந்தது. அப்போது விஸ்வசர்மாக்களின்குல தெய்வமானகாளிதேவிக்கு முதலில் இவ்விடத்தில் கோவில் கட்டி வரும் பௌர்ணமியில் சந்திர பூசையும் இக்கோவிலில் விஷேட அம்சங்களாகும். வசந்த மண்டப பூசையை அடுத்து அன்னை நறுமலர்களால் அலங்ரிக்கப்பட்ட ஹம்ச வாசனத்தில் எழுந்தருளி பக்தர்களுர்கு காட்சி தருவாள். இத்துடன் நவராத்திரி விழாவும் நிறைவு பெறும்.

### கோவிலின் வளர்ச்சி

மேலும் 19ஆம் நூற்றாண்டின் 1800ஆம் ஆண்டுப் பகுதியில் இக்கோவிலின் வளர்ச்சியில் இரண்டாம் கட்டம் ஆரம்பமானது. இக் கோவிலின் ஸ்தாபகர்களின் வழிவந்த விஸ்வப்பிராமண குலத்தவர்களாலும், இக்கிராமத்து மக்களாலும் பொருள் உதவப்பட்டு செங்கற்களால் முன்னர் இருந்ததை விட விசாலமாக கட்டப் பெற்று குடமுழுக்கு செய்யப்பட்டதென யாழ். அரச செயலகத்தில் பாதுகாக்கப்படும் செப்புச் சாசனங்

மலரமைப்பு
**கு. விஜயகுமார்**
வலம்புரி செய்தியாளர்

வழிபடத்தொடங்கினார்கள. இக்கோவில் கிட்டத்தட்ட 1775 ஆம் ஆண்டு தொடங்கி நடைபெற்றதாகச் சான்றுகள் கூறுகின்றன. இச்சுற்றாடலில் விஸ்வகர்மாக்கள் அதிகமாக வாழ்ந்து வந்ததால் அவர்களினதும் முழு ஒத்துழைப்பில் இக்கைங்கரியம் நிறைவேற்றப்பட்டது.

### பூசையும் விழாவும்

இக்காலத்திலே கோவிலில் இரண்டு கால பூஜைகள் நடைபெற்று வந்தன. அத்துடன் புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரி விழாவை சிறப்பாக நடத்தி வந்தார்கள். தினமும் கொலு பூசையும் நடைபெற்றது .10 ஆம் நாள் மானப்பூ நடைபெற்று அம்பாள் குதிரை வாகனத்தில் வீதிவலம் வருகின்ற சிறப்பும் 11 ஆம் நாள திருவூஞ்சல் முடித்து வசந்த மண்டப பூசையும் நடைபெற்று அம்பாள் தண்டிகையில் வீதிவலம் வருவதும் 12 ஆம் நாள் அன்று விடையார்த்தி எனும் வேட்டைத் திருவிழாவும் 15 ஆம் நாளில் களும் பதிவுகளும் கூறுகின்றன. அத்துடன் இக்காலங்களில் நடைபெறு வந்த நவராத்திரி விழாக்களில் தினமும் ஏறக்குறைய நூறு பக்தர்கள் வரையில் கலந்து கொள்வதாகவும் இந்தச் சான்றுகள் கூறுகின்றன.

இக்கோவில் உற்பத்திக் காலம் தொடங்கி சுமார் ஒரு நூற்றாண்டுக் காலம் வரை புராதன சம்பிரதாயங்களைப் பின்பற்றி இக்கோவிலின் நித்திய, நைமித்திய பூஜா கைங்கரியங்களையும் இவ் ஆதீனத்தைச் சார்ந்த விஸ்வப் பிராமண குமார்களே நடத்தி வந்தார்கள். இதில் முதலாவது குருவாகக் கடமையாற்றியவர் பிரம்மஸ்ரீ மல்லிகார் ஜீன் ஸ்தபதியார் ஆவார். இவருக்கு அடுத்தாற்போல். இவரது இளைய சகோதரர் பிரம்மஸ்ரீ பிரசன்னகுமார் ஆச்சாரியார் அவர்களும் அதன் பின்னர் இவர்களின் மருமகனான மதுசூதன ஆச்சாரியாரும் ஆவார்கள்.

இந்த மூவருக்கும் பின்னர் இந்நாட்டிலே போதிய குருத்துவ அறிவு படைத்தவர்கள் மிகவும் அருகிவிட்ட காரணத்

**மங்கையர் மனங்கவரும் கண்கவர் டிசைன்களில்**
**தங்க நகைகளை பெற்றுக்கொள்ள இன்றே விரையுங்கள்.**



**அர்ச்சனா ஜுவலர்ஸ்**

*176 1, நாவலர் வீதி,*
**யாழ்ப்பாணம்.**

*118, கஸ்தூரியார் வீதி,*
**யாழ்ப்பாணம்.**

(கி 1435)

# தேவஸ்தானம்

# 07 - 02 - 2001



## ாவும் ஒழிகவென வேண்டி
## காலடியைத் தொழுவோம்



ல் ஒரு நூற்றாண்டின்
ஆருஷேய குருமார்
ால் மேற்படி கைங்கரியங்
இன்று வரை நடத்தப்படு
து.
சிங்கற்களால் கட்டப்
ட இக்கோவில் காலப்
க்கில் பழுதடைந்திருந்த
ரணத்தால் 1891ஆம்
ண்டு அவை பிரிக்கப்பட்டு
ரக்கற்களால் கர்ப்பக்கிர
ம் அந்த ராண முக,
பன மண்டபம் எனும்
ண்டபங்களையும் கட்டி
த்து 1901ஆம் ஆண்டு
வரி வருடம் ஆவணிமாதம்
றாகும்பாபிஷேகம் நடை
ற்றதாகக் கோவில் சாசன
கள் விஞ்ஞாபிக்கின்றன.
பணிக்கும முக்கியமாக
வகர்மகுல மக்களே
ருள்உதவிபுரிந்த நாகலிச்
னங்கள் சாற்றுகின்றன.

### ந்த மண்டபம் அமைப்பு

918ஆம் ஆண்டு வரையில்
ாமண்டபத்தை அடுத்து
போது நிலைகொண்டிருக்
நிருத்த மண்டபத்தை
மத்தார்கள். இங்கு தான்
, பலிபீடம், துவஜஸ்
மேடை, முதலியன
ம்பெற்றுள்ளன. அந்நாட்
லேயே யாகவேதிகா மண்
மும் அமைக்கப்பட்டு விட்
. இந்த மண்டபம்அமைக்
பட்ட காலத்திலேயே
போது கம்பீரமாகக்
சி தரும் தோரண
பில் அதாவது இராஜ
புர வாயில் என்பன
ரச்கற்களால் கட்டப்பட்
.

### ஹேய பூசகர்கள்

லய நித்திய, நைமித்திய
மங்கள். வேதாகம சாஸ்
ங்கள் விஸ்வப் பிராமண
சத்தாரின் பௌரோஹித்
கருமங்கள், மனுசுக்தம்,
வ சூக்தம்முதலிய வைதீக
யோகங்கள் வழியிலும்
ஹேயர்களால் திறம்பட
பெற்று வருகின்றன.

ஆருஹேயக் குருக்களாக முதன்முதலில் இங்கு கடமை ஏற்றவர்பிரம்ம ஸ்ரீ இராம லிங்கக் குருக்களாவார். இவரின் மறைவுக்குப் பின்னர் அவரது மருமகனான கந்தர் மடம் பிரம்மஸ்ரீ பரமேஸ்வரக் குருக்களும் அவரது மைந்தரான பிரம்மஸ்ரீ சோமாஸ் கந்தக் குருக்களும் கடமையாற்றினர்.

### புதிய புனரமைப்பு

1971ஆம் ஆண்டுபுனரமைப்புச் செய்யும் நோக்குடன் ஒரு சுபமுகூர்த்தத்தில் பாலஸ் தாபனஞ் செய்து திருப்பணிகள் ஆரம்பமாகின. கர்ப்பக்கிரகம், கர்ப்பக்கிரஹத்து விதானவிமானம் மஹாமண்டப சிற்சபைவிமானம், சுற்றுக்கோவில், அவைகளின் விமானங்கள், கோவிலுக்கு வெளியேயுள்ள விநாயகர்

தொடர்ந்து ஆண்டுதோறும் குப்பாபிஷேக தினத்தில் சங்காபிஷேகமும் நடைபெற்று வந்தது 1984 ஆம் ஆண்டில் கொடிமர பிரதிஸ்டை செய்து பிரம்மோற்சவத்தை வருடா வருடம் நடத்த அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்கள்.

### யந்திர ராஜம் பிரதிஸ்டை

1982 இல் ஸ்ரீ வித்யா உபாசகர்களாலும் ஆதிசங்கர பகவத் பாதரைப் போன்ற மஹநியர்களாலும் போற்றப்பட்ட ஸ்ரீ சக்கரமேரு என்னும் யந்திர ராஜம் இங்கு பிரதிஸ்டை செய்யப்பட்டது. அத்துடன் வருடா வருடம் புரட்டாதி மாத விஜயதசமி அன்று முதல் தொடர்ந்து 21 நாட்களும் கேதார கௌரி நோன்பு அநுட்டிக்கப்பட்டு கடைசி நாள் கௌரிக்காப்பு

## கட்டுரையாக்கம்
## தேவஸ்தான நிர்வாகசபை

ஆலயம் முதலியன முற்றிலும் புதுப்பிக்கப்பட்டு புனரமைப்புச்செய்யப்பட்டது கருவறையின்துவதன விமானம் மஹாமண்டபத்தின் சிற்சபை விமானம் இவைகளில் அமைக்கப்பட்டிருக்கும் தேவ தேவியர்கள், சக்தி கணங்கள், யோஹினிகள் முதலியவைகளின் உருவங்கள், பிரதிமைகள் அபூர்வ எழிலுடனும் வனப்புடனும் விளங்குகின்றன.

இவ்வளவு சிறப்புடன் விளங்குகின்ற விமானங்களையும் அவைகளிலுள்ள சிற்பங்களையும் அமைத்தவர் சிற்ப சாஸ்திர விற்பன்னரும் தமிழ் நாடு இராமநாதபுரம் ஜில்லாவின் ஒரு தாலுக்காவான நாட்டரசன்கோட்டைஎனும் இராஜதானியில் புகழ்பெற்ற சிற்ப வித்தர்களின் வழித்தோன்றலான பிரம்மஸ்ரீ நாகலிங்கம் ஸ்தபதியாராவார்.

### கும்பாபிஷேகம்

இது பரிபூரணமடைந்து 1974 ஆம் ஆண்டில் வைகாசி மாதம் 27 ஆந் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்றது அப்போது கோவில் நித்திய பூஜைகளையும் விழாக்களையும் திறம்பட நடத்தி வந்த ஆருஹேய குருக்களான இருபாலை ஜோதீந்திரக் குருக்களால் மஹாகும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

நூலும் அடியார்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### சித்திரத்தேர்

புதிய சித்திரத்தேரை நிர்மாணிப்பதற்காக தமிழ் நாட்டில் இருந்து வரவழைக்கப்பட்ட லெட்தமணஸ்தபதி சின்னத்தம்பி ஸ்தபதி மற்றும் அவர்கள் சார்ந்த குழுவினரால் ஆரம்பிக்கப்பட்டு பகுதி பகுதியாக முடிவடைந்துள்ளது தவிர்க்க முடியாத சில காரணங்களால் இச்சித்திரத்தேரை மஹோற்சவ காலங்களில் உபயோகிக்க முடியாமல் இருந்து தற்போது அத்தடையும் நீங்கி எதிர்வரும் மஹோற்சவ காலங்களில்புதிய சித்திரத்தேரில்அம்பாள்பவனி வர அனுகூலம்கிட்டியுள்ளது.

சென்ற ஆண்டு 1999-3-19 பங்குனி மாதம் பாலஸ்தாபனம் நடைபெற்று 2001 ஆம் ஆண்டில் மஹாகும்பாபிஷேகம் நடத்துவதற்கான திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அனலைதீவைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ ந. தாமோதரம் ஐயர் அவர்களினால் தற்போது நித்திய பூஜைகளும் உற்சவங்களும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சுபர்னஸரிஷி கோத்திர விஸ்வப்பிரம்ம குலத்தவர்களினால் அன்று முதல் இன்று வரை இக்கோவில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

எழில் குன்றா அழகிய
தங்கப் பவுண் நகைகளை
உங்கள் எண்ணம் போல் செய்து
பெற்றிட

தயா நகைப்பூங்கா
தங்க வைர நகை வியாபாரம்
இல. 213 C, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1438)

நவயுகம் மகிழும் புதுமலர் பூங்கா
சிறி மீனாட்சி
புதுமணத் தென்றலில் பூத்து நிற்கும்
நவ நாகரீக நகை உலகம்

சிறி மீனாட்சி
தங்க மாளிகை
187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(கி-1439)

நவீன வடிவமைப்புக்களில்
அழகிய தங்க நகைகளை
செய்து பெற்றுக் கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

துர்க்கா
நகைப் பூங்கா
தங்கப்பவுண் நகை வியாபாரம்
71, கன்னாதிட்டி
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 2228

(கி-1436)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட
அருந்திடுங்கள் அபீஸ் கோப்பி,
அபீஸ் மல்லித்தூள். அபீஸ் தேன் கலந்த பேரீச்சம்பழம்
மேலும் அபீஸ் வெற்றுப்பைக்கட்டுக்களை
சேகரித்து அனுப்புபவர்களுக்கு ஒரு மணிக்கூடு
இலவசம்

மேலதிக விபரங்களுக்கு

அபீஸ்கோப்பிசென்ரர்
சத்திரத்துச் சந்தி. யாழ்ப்பாணம்.

(கி-1423)

தரமான சுருக்கு கேற், கிறில், மற்றும்
சகல இரும்பு வேலைகளுக்கும்
நீங்கள் நாடவேண்டிய இடம்.

Pillaiyar Welding
&
Lorn Workshop
No. 483/1, K. K. S Road,
Jaffna.

(கி-1428)

பழைய, புதிய சினிமாப் பாடல் மற்றும் பக்திப்
பாடல்களை நேரடி C D மூலம்
சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்திடவும்
எம்மிடம் பதிவு செய்த கசற்றுக்கள் மற்றும்
C.Dகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும்
நாட வேண்டிய இடம்;

தீஸ் ஒடியோ
இல. 40, கன்னாதிட்டி. (மக்கள் வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.

(கி-1434)



# வைத்தியசாலை சிறப்புற இயங்குமானால்

# 2 ஆயிரம்பேருக்கு வேலைவாய்ப்பளித்திட முடியும்

## துணைவேந்தர் அபிப்பிராயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலை சிறப்புற இயங்குமானால், நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ இரண்டாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட முடியும்.

அன்றியும் யாழ்.மக்களின் நிதிவளம் தென் பகுதிக்கோ அல்லது சென்னைக்கோ செல்கின்ற நிலை உருவாகமாட்டாது.

நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையின் கண்சத்திரசிகிச்சைகூடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் யாழ்.பல்கலைக் கழகத்துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைத்தியசாலைப் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரத்தினம் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கண்சத்திரசிகிச்சை நிலையத்தை திறந்து வைத்தார்.

துணைவேந்தர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை, இலங்கையில் இரண்டாம் இடத்தை வகித்து வந்த காலம் மலையேறி விட்டது.

அந்த நிலையை மீண்டும் ஏற்படுத்திட நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என்றார்.

மேலும், இந்த வைத்தியசாலை தற்போது எத்தனையோ இடர்பாடுகள், இன்னல்களுக்கும் இடையே இயங்கி வருகிறது.

வைத்தியசாலையின் பணிகளுக்கு உற்ற துணையாய் விளங்க வேண்டிய வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் ஆகியோர்க்கு இங்கே பெரும் பற்றாக்குறை நிலவி வருகிறது.

இருப்பினும் குறைந்தளவு வளத்தைக் கொண்டு நிறைந்த சேவை புரிகின்ற பணியாளர்களைப் பாராட்டாதிருக்க முடியாது.

இன்றைக்கு இந்த கண் சத்திரசிகிச்சை கூடத்தை திறந்து வைப்பதற்கு பல வழிகளிலும் உதவியவர்களைப் பாராட்டுவதுடன் இவ்வாறான அபிவிருத்திப் பணிகள் மேலும் தொடரவேண்டும் என்பதே என் அவா.

யாழ் குடா நாட்டில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக தென்பகுதிக்கோ அன்றி சென்னைக்கோ செல்லும் நிலை, எமது வைத்தியசாலை நவீன வசதிகளுடையதாய் இயங்கும் பட்சத்தில் ஏற்பட வழியில்லை என்று குறிப்பிட்டார். (உ-12)


## யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளியம்பாள் தேவஸ்தானம்

## மஹாகும்பாபிஷேகசிறப்புமலர் 7.02.2001

4 ஆம் பக்கத் தொடர்ச்சி

சகல விதமான ஆபரணங்களையும், நவீன டிசைன்களில் வடிவமைத்திடவும்
தாலிக்கொடி, மோதிரம் என்பவற்றை
தரச் சிறப்பாகப் பெற்றிடவும்

**ஒலிம்பிக் நகைத் தொழிலகம்**

இல.190/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1437)

சகல விதமான பல் பொருட்களையும்
நியாய விலையில் பெற்றிட

**ஐங்கரன் ஸ்ரோர்ஸ்**

354, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1425)

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
உலகம் வியக்கும் உன்னத நகைத் தெரிவுக்கு
சிறந்த நகை மாடம்

**நந்தினி நகைமாடம்**

218 G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1427)

உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள
தங்க வைர நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்.

**உதய கதிரவன் நகை மாடம்**

172, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1432)

நங்கையரின் அழகுக்கு அழகூட்டும் நகைத் தெரிவுகளுக்கு
சிறந்த நகையகம்

**அம்பிகா நகை மாளிகை**

இல. 122, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(கி-1422)

சகல விதமான T. V கள் டெக், CD பிளையர்
கசற் றேடியோ, இதர மின் உபகரணங்கள்
குறித்த தவணையில், தரமான முறையில்
பழுது பார்த்து கொடுப்பவர்கள்
எம்மிடம் உதிரிப்பாகங்களும்
பெற்றுக் கொள்ளலாம்.

**வாசன் T.V சென்ரர்**

இல. 40, கன்னாதிட்டி வீதி,
(மக்கள் வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.

(கி-1431)

சகலவிதமான கடைச்சல் வேலைகளுக்கும்
நீங்கள் நாட வேண்டிய இடம்

**கோகுலன் கடைச்சல் தொழிலகம்**

இல. 72/11 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(கி-1424)

நவ நாகரீக டிசைன்களுக்கும்,
உத்தரவாதத்திற்கும், உறுதியான வேலைக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்,

**ரூபி நகை மாளிகை**

இல. 111/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-1421)

### இன்று ஒரு தகவல்

# சோதிடம் ஒரு கலையே விஞ்ஞானம் அல்ல

'சையன்ஸ் எற்வீ' என்று ஒரு பிரஞ்சுப் பத்திரிகை 1968 இல் பத்துப்பேரின் பிறந்த நாள், பிறந்த நேரம், பிறந்த இடம் எல்லாம் கொடுத்து, கம்யூட்டர் மூலமாகக் கணித்து குணாதிசயங்களை பார்த்ததாம். அதில் ஒருவரைப்பற்றி உயர்வாகப் பலன் சொல்லியிருந்ததாம். மிகவும் பண்பாடு உள்ளவர். மனித இனத்தின்மேல் மென்மையான அன்பு கொண்டவர். பொதுநலத்திற்காக தியாகம் செய்யக்கூடியவர் என்பதே அப்பலன்கள்.

உண்மையிலே அவர் யாரென்றால் நாட்டையே காட்டிக்கொடுத்த ஒரு கொலைகாரராவார். 27 பேரைக் கொன்றவர். கடைசியில் 1946 மே 26 ந் திகதி 'கில்லட்' டில் தலைமையைப் பறிகொடுத்தவர். மற்றைய ஒன்பது பேருடைய பலனும் இப்படித்தான் ஏறுமாறாயிருந்தது.

1949 இல் வில்லியம் பாரஸ்ட் என்கின்ற ஒரு உளவியல் பேராசிரியர் 39 மாணவர்களிடம் ஒரே மாதிரியான ஜாதகக்குறிப்புகளை எழுதிக் கொடுத்தார். உங்களை மற்றவர்கள் நேசிக்கவேண்டும் என்றுவிருப்புவீர்கள். நீங்கள் சுயேச்சையான மனோபாவம் உள்ளவர். இப்படியாகப் 13 வரிகள் எழுதியிருந்தார் எல்லாவற்றிலும் ஒரே மாதிரி அந்த 39 பேரில் 34 பேர், நீங்கள் சொல்வது எனக்கு நூற்றுக்கு நூறு சரியாக இருக்கிறது. ஐயா? நீங்கள் பெரிய சோதிடர்தான் என்று பாராட்டினார்களாம்

இதேமாதிரி 1964 இல் கூட பிரஞ்சுஉளவியல் நிபுணர் ஒரு சோதனை செய்தார். தான் ஒரு சோதிடர்என்றும் பிறந்த திகதியை அனுப்பினால் ஜாதகப் பலனை அனுப்புவதாகவும் பத்திரிகையில் விளம்பரம் செய்தார். அதற்குப் பதில் போட்ட 250 பேருக்கு ஒரே மாதிரியான பலனை அனுப்பிவைத்தார். 200 பேர் அவர்களுக்கு அந்தப் பலன் மிகவும் பொருத்தமானதென்று சொல்லிப் பாராட்டினார்களாம்.

ஜோஹன்ஸ் கெப்ளர் என்கிறவர் ஒரு வானியல் மேதை. சோதிடம் சொல்லிப்பிழைப்பு நடத்தினார். அவரே 'எதிர்காலத்தைத் தெரிந்து கொள்ளும் ஆசையில் மனிதனை வானத்து நட்சத்திரங்களைக் கூர்ந்து கவனிக்க வைத்தது தான் சோதிடம் செய்த ஒரே நல்லகாரியம்' என்று சொன்னார்.

பாரிஸில் ஜீன்ரிச்சர்டு ஒரு பெரிய சோதிடர். 'சோதிடத்தில் விஞ்ஞானம் இல்லை அது ஒரு கலை, அதில் எதையுமே முழுவதுமாக நிரூபிக்க முடியாது. சோதிடம் கனவுலகுக்குச்சொந்தமானது' என்று அவர் சொல்லுகிறார்.

எது எப்படி இருந்தாலும், தனக்கு ஆறுதலாக இருக்கிற எந்த விடயமாக இருந்தாலும், அதில் ஒரு ஈடுபாடு வருகிறதுமனித இயல்பாகும். அப்படிக் கிடைக்கிற ஆறுதலும் கொஞ்சம் பொருத்தமானதாகஇருந்தால் நல்லது. சில சமயம் பொருத்தமில்லாததாகவும் அமைந்து விடுகிறது.

ஒரு தாத்தா எண்பது வயதுக்கு மேலிருக்கும் ரயில்வே நிலையத்தில் நின்று கொண்டிருந்தார். திடீரென்று தன்னுடையஎடை என்னவென்று பார்க்க அவருக்கு ஆசை ஏற்பட்டது. பக்கத்திலிருந்த மிஷினில் ஏறி நின்று காசை போட்டார். ஒரு டிக்கற் வந்து விழுந்தது. எடுத்துப் பார்த்தார். எடை 55 கிலோ என்று இருந்தது அதற்குக் கீழே உங்களுக்குக் கூடிய விரைவில் திருமணம் நிச்சயமாகும் என்று எழுதியிருந்தது.

நென்நர்சி நோ.சுவாமிநாதன்

# ஹெலிரூர்ஸ் அலுவலகம் கற்பகம் கட்டடத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு விமானமூலம் சென்று வரும்பெருந்தொகையான பயணிகளின் நன்மைகருதி பயணச் சீட்டை விநியோகிக்கும் ஹெலிரூர்ஸ் அலுவலகம் பம்பலப்பிட்டியிலுள்ள பனம்பொருள் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கற்பகம் கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பெருந்தொகையான பயணிகளின் வேண்டுகோளை அடுத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக ஹெலிரூர்ஸ் பயணச்சீட்டு அலுவலகம். கற்பகம் கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வலுவலகம் திறந்துவைக்கப்பட்டிருப்பதால் யாழ்ப்பாணத்திற்குச் சென்று வரும் பயணிகள் பயணச்சீட்டுக்களைப் பெறுவதில் எதிர்நோக்கும் சிரமங்கள் பெரிதும் குறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இடம் பெயர்ந்த மக்கள் மத்தியில்

# ஜனாதிபதியின் பணிப்பில் பல்வேறுவேலை திட்டங்கள்

(ஆவரங்கால்)

உள்ளூரில் இருந்து இடம்பெயர்ந்து வாழ்பவர் மத்தியில் கீழ் வரும் வேலைத் திட்டங்களை உடன் நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி செயலகம் யாழ். அரச அதிபரை பணித்துள்ளது.

★புதிய நலன்புரி நிலையங்களை அமைத்தல்

★ஏற்கனவே அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களை திருத்துதல் அல்லது புதுப்பித்தல்

★பொதுக் கட்டடங்களை நலன்புரி நிலையங்களாக காற்றுவதற்கான திருத்தங்களை, புனரமைப்பினை மேற்கொள்ளல்.

★மலசல கூடங்கள், கிணறுகள், சுகாதார நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள் போன்றன அமைத்தல்.

★இடம் பெயர்ந்த மாணவர்க்காய் பாடசாலைகளில் மேலதிக கட்டடங்களை அமைத்தல்.

மேற்படி திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஏதுவாக வேண்டிய விபரங்களை உடன் சமர்ப்பிக்குமாறு சகல பிரதேச செயலகங்களையும் அரச அதிபர் கோரியிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. [உ-57]

# இந்துமா மன்றத்தின் இலைக்கஞ்சி திட்டத்தை விஸ்தரிக்க கோரிக்கை

(சங்கானை)

இலங்கை வட மாநில இந்து மாமன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இலைக்கஞ்சித் திட்டத்தினை பல்வேறு இடங்களுக்கும் விஸ்தரிக்கும்படி பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி மன்றத்தினால் ப.நோ.கூ.ச. ஆதரவுடன், நடைபெற்று வரும் இத்திட்டத்தின் பயன்பாடு பல பகுதிகளுக்கும் பரவ வழிவகை சமைத்திட வேண்டும் எனவும் குறிப்பாக இடம் பெயர்ந்த மக்கள் வாழ்கின்ற முகாம்களில் இத்திட்டத்தினை முன்னெடுப்பதன் மூலம் முழுமையான பயனைப் பெற முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

இதேவேளை, தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தின் அனுசரணையுடன் உரும்பிராய் செல்வபுரத்தில் இரண்டாவது தடவையாக கடந்த ஞாயிறன்றும் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது (உ-ப-18)

## போரூட் நிறுவனம் உதவி

(யாழ்ப்பாணம்)

மாகியம்பதி கிராமத்திற்கென போரூட் நிறுவனத்தினால் மேலும் ஆறு வீடுகளும் ஆறு மலசல கூடங்களும் அமைத்துக் கொடுக்கப்படவிருப்பதாய் சம்பந்தப்பட்ட நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கிராமத்தில் சென்ற ஆண்டும் 5 மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

## சிரமதானம்

(ஈச்சமோட்டை)

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் விரைவில் நடைபெற உள்ளதால், பாடசாலை மைதானத்தை பழைய மாணவர்கள் சிரமதான அடிப்படையில் துப்பரவு செய்து வருகின்றனர். (உ-59)

## போலி நோட்டுகள் புழக்கத்தில்

(கொழும்பு)

போலி ஆயிரம், ஐநூறு ரூபாய் நோட்டுகள் புழக்கத்தில் இருப்பதால் பொதுமக்களை விழிப்பாக இருக்கும்படி பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

5 லட்சத்தி 65 ஆயிரம் ரூபா பெறுமதியான போலி ஆயிரம், ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் புழக்கத்தில் விடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ)

## பன்னிரு திருமுறைப் பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதந் தோறும் நடத்தி வரும் பௌர்ணமி தின அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதலும், பன்னிரு திருமுறைப் பாராயணமும் இன்று காலை 8.00 மணிக்கு வண்ணார்பண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயத்தில் நடை பெறவுள்ளது.

மன்றத் தலைவர் வ. பேரின்பநாயகம்தலைமையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது. (செ)

## கவிதை நூல் வெளியீடு

(மந்திகை)

நாவற்குழி கி.இலட்சுமணன் எழுதிய நாவற்குழி இலட்சுமணன் கவிதைகள் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 30 மணிக்கு பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பல கலைஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-23)

## துர்க்காபுர மகளிர் இல்ல 19 வது ஆண்டு நிறைவும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல 19 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இம்மாதம் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் [நந்தி] கலந்து கொள்கிறார்.

அன்றைய தினம் துர்க்காபுரம் மகளிர் இல்ல பிள்ளைகளின் கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (உ)

## பயணச் சீட்டு பெறச்சென்ற வேளை கைதானோர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பயணச் சீட்டு பெறச் சென்றபோது மணியம் கட்டடத்தில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்ட மூவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பொன்னுத்துரை சசிக்குமார் (வயது 22 ஜீவராஜா ரஜீகரன் (வயது 21) நன்னித்தம்பி சிறிரங்கன் (வயது 21) ஆகியோரே கிராம சேவகர் முன்நிலையில் படையினரால் விடுவிக்கப்பட்டுள்ளனர் என பிரஸ்தாப இளைஞர்களின் பெற்றோரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இந் நபர்களில் இருவர் இம்மாதம் 3 ஆம் திகதியும் மற்றைய நபர் 5 ஆம் திகதியும் விடுவிக்கப்பட்டதாய் மேலும் தெரியவந்துள்ளது. (உ-12)

## 20 ஆயிரம் கிலோ அரிசி திருப்பியனுப்பப்பட்டது

### பாவனைக்கு உதவாததாம்

(மந்திகை)

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு நிவாரண விநியோகத்திற்கென அனுப்பப்பட்ட 20 ஆயிரம் கிலோ கிராம் அரிசி பாவனைக்கு உகந்ததல்ல என இனங்காணப்பட்டதையடுத்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பகுதியில் அமைந்துள்ள களஞ்சியத்தில் பெறப்பட்ட இவ் அரிசி மூடைகளை பார்வையிட்ட சுகாதார பரிசோதகர்கள் பாவனைக்கு உகந்ததல்லஎன தெரிவிக்கப்பட்டதை அடுத்து சுமார் 20 ஆயிரம் கிலோ அரிசியையும் விநியோகிக்காது யாழ். செயலக அரச களஞ்சியத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாய் தெரியவந்துள்ளது. (உ-23)

## இடம்பெயர்ந்த மாணவர் போட்டிகளில் சேர்த்து கொள்ளப்படுவர்

(மந்திகை)

யாழ்ப்பாண குடாநாட்டில் யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்து, ஐந்து வலய பாடசாலைகளிலும் தற்காலிகமாக கல்வி கற்கும் மாணவர்கள் கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்படும் அனைத்து கல்வி சார்ந்த, கல்விசாராத போட்டிகளிலும் சேர்த்துக் கொள்ளப்படுவர் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி, வடமராட்சி கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்த மாணவர்களை தற்காலிக மாணவர்களாக கருதி பாடசாலைகளில் நடைபெறுகின்ற போட்டிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை என பெற்றோர்களால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இது தொடர்பாக கடந்த வெள்ளியன்று மேலதிக கல்விப்பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்ட வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், யாழ்ப்பாணம், தீவகம் ஆகிய வலயப் பணிப்பாளர் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

இம்மாதம் 5 ஆம் திகதி முதல் 'தற்காலிகமாக கல்வி கற்கும் பாடசாலைகளில் இவர்கள் நிரந்தர மாணவர்களாக கருதப்படுவர் எனவும்,

பாடசாலை வலய, மாவட்ட, மாகாண மட்டத்தில் நடைபெறும் விளையாட்டு, தமிழ்த்தினப்போட்டி ஆங்கிலதினப்போட்டி, உடல் பயிற்சிப்போட்டிகள் போன்ற கல்விசார்ந்த, கல்விசாராத போட்டிகளில் மாணவர்களை சேர்த்துக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது. (உ-23)

# பொலிஸ் கொலை இருவர் காவலில்

[டாக்கா]

கடந்த சனிக்கிழமையன்று பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் பொலிஸ்காரர் ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்து தீவிர இஸ்லாமிய வாதக் குழு ஒன்றின் இரண்டு தலைவர்களைகாவலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

'தத்வர்' எனப்படும் மத ஆணைகள்சட்டத்துக்குப்புறம் பானவ என்று அண்மையில் வெளியிடப்பட்ட நீதிமன்ற உத்தரவை எதிர்த்து இஸ்லாமியக் குழுக்கள் இந்தவேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி குழுக்களைச் சேர்ந்த இரண்டு பேரும் வன்முறையைத் தூண்டியதுடன் நீதிபதிகளைகொல்லப் போவதாக அச்சுறுத்தினார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

[உ-9]

# எம்மை பிரிட்டிஷ் பிரஜையாக ஏற்க பிரிட்டன் மகிழ்ச்சியடைய வேண்டும்

## ஹிந்துஜா சகோதரர் தெரிவிப்பு

(லண்டன்)

போபர்ஸ் பீரங்கி ஊழல் வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஹிந்துஜா சகோதரர்கள் தம்மை பிரிட்டிஷ் பிரஜைகளாக வைத்திருப்பதற்கு பிரிட்டன் மகிழ்ச்சியடைய வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டிஷ் பாஸ்போட் பெறுவதற்காக தாம் எவருக்கும் பணம் கொடுக்கவில்லை என பலமாக மறுத்து ஹிந்துஜா பிரிட்டனின் புத்தாயிரமாம் ஆண்டுகோபுரத்துக்கு தான் 10 லட்சம் பவுண் நன்கொடை அளிக்கவில்லை என்றும் மறுக்கிறார்.

ஈரான் உட்பட பல நாடுகள் தங்களுக்குப் பாஸ்போட் அளிக்க முன்வந்துள்ளதுடன் தம்மை பிரஜையாகக் கொண்டிருப்பது தங்களுக்கு கௌரவம் என கருதுகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

போபர்ஸ் விசாரணை இன்னும் நடைபெற்று வருவதனால் ஹிந்துஜா சகோதரர்கள் இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு இந்திய நீதிமன்றம் அனுமதி மறுத்துள்ளது.

ஹிந்துஜா சகோதரர்களின் பிரிட்டிஷ் பாஸ்போட் விவகாரம் தொடர்பாக பிரிட்டிஷ் அமைச்சர் பீட்டர் மன்டெல்ஸன் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(செ)

## உலக தரிசனம்

# இஸ்லாமிய சட்டத்தினால் வெளியேறும் கிறிஸ்தவர்

(லாகூஸ்)

நைஜீரியாவின் வடமா நிலமான சம்பாவில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நைஜீரியாவில்நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட இஸ்லாமிய சட்டங்களை அடுத்தே இங்கு கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதாக நைஜீரிய கிறிஸ்தவப் பேராயர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய சட்டங்கள் அமுலுக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து இங்கு கிறிஸ்தவ ஆலயங்கள கட்டப்படுவதற்கும் தடை ஏற்பட்டதனாலேயே கிறிஸ்தவர்கள் நைஜீரியாவை விட்டு வெளியேறுகின்றனர்.

(செ)

# இஸ்ரேலிய மீட்புப் பணியாளர் இந்தியாவில் இருந்து வாக்களிப்பு

(குஜ்)

நேற்று நடைபெற்ற இஸ்ரேலின் பிரதமரைத் தெரிவு செய்யும் தேர்தலில் இந்தியாவின் குஜ் பகுதியில் மீட்புப் பணிகளில் ஈடுபட்ட இஸ்ரேலிய படையினர் இந்தியாவில் இருந்து வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற்காக 150 இஸ்ரேலியப் படையினர் இந்தியா வந்திருந்தனர்.

இவர்களும் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்பதற்காக இந்தியாவிலேயே ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டது.

(உ-9)

# கிரிக்கெட் போட்டி சார்ஜாவில் இரத்து

[புதுடில்லி]

குஜராத்தில் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிதி சேகரிப்பதற்காக சார்ஜாவில் நடைபெறவிருந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இப் போட்டியில் கலந்து கொள்வதா இல்லையா என பாகிஸ்தானும் இந்தியாவும் எது விதமான பதிலையும் ஆசிய கிரிக்கெட் சங்கத்திற்கு அனுப்பாத காரணத்தினாலேயே இச் சுற்றுப் போட்டிகள் இரத்துச் செய்யப்படுவதாக ஆசிய கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.

[செ]

# மனநிலை பாதிப்படைந்த நிலையில் குஜராத் மக்கள்

(புதுடில்லி)

எவ்வளவுதான் உதவிகள் வந்து குவிந்தபோதும் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மனநிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுகளிலிருந்தும் தெரியவந்துள்ளது.

இடிபாடுகளுள் சிக்கி மீட்கப்பட்டவர்களில் 90 சதவீதம் பேருக்கு எலும்புமுறிவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வாறு அழிவுகளை சந்தித்த பலரும் மனவிரக்தி அடைந்த நிலையில் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

# மயிரிழையில் உயிர்தப்பிய நேபாள பிரதம நீதிபதி

(காட்மண்டு)

நேபாளத்தின் பிரதம நீதிபதி கேஷவ் பிரஸாத் உபாத்யாய,மாவோ தீவிரவாதிகளின் கொலை முயற்சியிலிருந்து உயிர்தப்பியுள்ளார்.

மேற்கு நேபாளத்தில் பரிசோதனை விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த போதே இவர் தீவிர வாதிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகினார்.

நீதிபதியின் சிரேஷ்ட சட்ட அதிகாரி ஒருவரும் நான்கு பாதுகாப்பு காவலர்களும் கொல்லப்பட்டு விட்டனர்.

(செ)

## செய்திப்பரல்

★ கியூபாவில் கைது செய்யப்பட்ட முன்னாள் செக் அதிகாரிகளை விடுவிக்க அந்நாட்டு சிரேஷ்ட அதிகாரி ஒருவர் மேற்கொண்ட முயற்சி பலன்கொடுக்கவில்லை.

★ கடந்த சனியன்று மேற்கு நேபாளத்திற்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டநீதிபதி குழுமீதுதுப்பாக்கித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

★ பிலிப்பைன்ஸில் உள்ள மயோான் எரிமலை வெடிக்கும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ புதிதாக பதவியேற்ற அமெரிக்க ஜனாதிபதி புஷ் காம்க்டேவிற்பகுதியில் இருந்து தென்னாபிரிக்க தலைவருடன் தமது நட்புறவு குறித்து தொலைபேசியில் உரையாடி உள்ளார். [உ-9]

# காணாமற் போனவர் மீண்டு வந்து பதவியை இராஜினாமா செய்தார்

(வாஷிங்டன்)

கடந்த வெள்ளியன்று 24 மணி நேரம்காணாமற்போய் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சிரேஷ்ட அமெரிக்க கல்வியாளர், ரேருட் அமெரிக்க பல்கலைக் கழகத்தில் தனது பதவியை ராஜினாமாச் செய்வதாக அறிவித்துள்ளார்.

காணாமற் போன அவர் கடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தேடுதல் மேற்கொண்டிருந்தனர்.

பின்னர் அவர் லெபனான் நண்பர் ஒருவரின் வீட்டில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது இதனைத்தொடர்ந்து 52 வயதான கெல்வினின் ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும், குடும்பத்துடன் சேர்ந்து கொள்ள அவர் சென்றிருப்பதாகவும் தெரிய வருகிறது. [உ-9]

# சீக்கியர் ஆர்ப்பாட்டம் ஸ்ரீநகரில் பெரும் பதட்டம்

(புதுடில்லி)

ஜம்முகாஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் சீக்கியர்கள் ஆறு பேர் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து அப்பகுதியில் கால வரையறையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதிகளில் சீக்கியர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அப் பகுதிகளில் பெரும் பதட்டம் நிலவி வருவதனால் பாதுகாப்பு படையினர் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளதனை அவதானிக்க முடிகிறது.

சுட்டுக் கொல்லப்பட்ட சீக்கியர்களின் உடல்களும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு உரிய சடங்குகளின் பின்னர் பொலிஸ் பாதுகாப்புடன் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(செ)

# ரயில்வே ஊழியர் வேலை நிறுத்தம் போக்குவரத்து ஸ்தம்பிதம்

[இலண்டன்]

இலண்டனில் ரயில்வே ஊழியர்கள் நேற்று முன்தினம் மேற்கொண்ட ஒரு நாள் வேலை நிறுத்தத்தினால் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரயில்வே துறையை தனியார் மயமாக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கையை எதிர்த்தே இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

சுரங்கப்பாதை ரயில்கள் எதுவும் சேவையில் ஈடுபடுத்தப் படவில்லை இதனால் போக்குவரத்து நெருக்கடி மிகுந்ததாகக் காணப்பட்டது.

(செ]

# சுவர் இடிந்து வீழ்ந்ததில் கைதிகள் தப்பியோட்டம்

(புதுடில்லி)

குஜராத் பூமியதிர்ச்சியின் போது சிறைச்சாலை சுவர் இடிந்து வீழ்ந்ததில் தப்பியோடிய கைதிகள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நான்கு பாகிஸ்தானியர்கள் உட்பட பதினாறு கைதிகள் மீண்டும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால்,இச் சிறையிலிருந்து நூற்றிஐம்பது கைதிகள் தப்பியோடி விட்டனர்.

1999ஆம் ஆண்டு அகமதாபாத் வெடிபொருள் கடத்தல் தொடர்பாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

தப்பியோடிய கைதிகள் சிலர் அவரவர் சொந்த ஊர்களில் இருந்தும், சிலர் பாகிஸ்தான் எல்லையில் வைத்தும் கைது செய்யப்பட்டுள்ளனர்

# பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதிக்கு மீண்டும் சிறைவாசம்

சிறையில் இருந்த பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி ஹுசெய்ன் முகம்மது எர்ஷாடுக்கு நெஞ்சுவலி ஏற்பட்டதால் வைத்திய சோதனை செய்வதற்காக அண்மையில் வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டிருந்தார்.

வைத்திய சோதனைகளை முடித்துக் கொண்ட ஜனாதிபதி மீண்டும் சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

71 வயதான எர்ஷாட்மீது 17 ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

1982 இல் சதிப்புரட்சி மூலம் ஆட்சிக்கு வந்த எர்ஷாட் கடந்த ஐந்தாண்டுகளாக சிறைவாசம் அனுபவித்துவருவது தெரிந்ததே.-9)

# சிம்பாவேயில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(ஹாராரே)

சிம்பாவேயிலுள்ள சுதந்திர வெகுஜன தொடர்பு சாதனங்களின சங்கம் நேற்று முன்தினம் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளது.

சிம்பாவேயில் உள்ள தனியார் பத்திரிகை நிறுவனம் ஒன்று அண்மையில் குண்டுத் தாக்குதலுக்கு உள்ளான சம்பவத்தை கண்டித்தே இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

சிம்பாவே அரசாங்கத்தை விமர்சிக்கும் வகையில் குறிப்பிட்ட பத்திரிகை கட்டுரை ஒன்றைப் பிரசுரித்தமையினாலேயே,இப்பத்திரிகை நிறுவனம் குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.(செ)

உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர் மேல்
வடுக்காண வற்றாகும்கீழ்
- குறள் -

# வலம்புரி

## புத்திமான் எரிக்சோல்

நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் கூச்சசுபாவமுடையவரென பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கா கண்டுபிடித்துள்ளார்.

கடந்த மாதம் கொழும்பிற்கு வந்திருந்த எரிக்சோலஹெய்ம் இரண்டு நோர்வேத் தூதரக அதிகாரிகளுடன் பாராளுமன்றில் தம்மைச் சந்தித்தபோது அவருடன் வருகை தந்திருந்த இரு அதிகாரிகளும் பல விடயங்கள் பற்றி ஆராய்ந்தனர். ஆனால் எரிக்சோல மட்டும் எதுவும் பேசவில்லை மாறாக விடைபெற்றுச் செல்லும் போது நன்றியெனக் கூறிச்சென்றார். ஆகவே எரிக்சோல் கூச்ச சுபாவமுடையவர் என்பது பிரதமர் எடுத்த முடிவு.

உண்மையில் பிரதமர் எடுதத முடிவில் பெரும் தவறு இருப்பதையும், எரிகசோல ஹெய்ம் புத்திமான் என்பதையும் இந் நிகழ்வு நிருபித்துள்ளது. இலங்கைஇனப்பிரச்சினை தொடர்பாக இலஙகை அரசுகேட்டதற்கமையவே நோர்வேத தூதுவர் எரிக்சோல் கொழும்பு வந்திருந்தார்.

அரசின் அழைப்பை ஏறறு வந்த எாிகசோல ஹெய்ம்சமாதான முயற்சியில ஈடுபட்டிருககும் போது பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயககா இனவாதத்தைக் கக்கிக் கொண்டிருந்தார். அவரின் இனவாதப் போக்கை நனகு அறிந்திருந்த எரிக சோல ''துட்டரைக்கண்டால் தூரத்தில்'' என்பதுபோல பகைவருடன் பேசுவதில் பலனில்லை என்ற தத்துவத்திற்கு அமைய பிரதமருடன பேசாது இருந்துள்ளார் போலும், இதனை பிரதமர் தவறாகப் புரிந்து கொண்டு எரிக்சோல கூச்ச சுபாவம் உடையவரெனத்தவறாகப் புரிந்து கொண்டுள்ளார்.


உண்மையில பிரதமருடன் பேசாதிருந்ததன் மூலம் எரிக்சோல் புத்திமான் என்பதை நிரூபித்து விட்டார்.

ஏனெனில் நாட்டின் பொறுப்பான பதவியை வகிக்கும் பிரதமரே பொறுப்பற்ற முறையில்- இனவாதத்தைத் தூண்டும் வகையில் உரையாற்றி வரும் போது அவருடன் பேசுவதால் எந்த விதமான பிரயோசனமும் ஏற்படாதுமாறாகதேவையற்ற மனக்கசப்பே ஏற்படும்.

எனவே பேசாமல் இருந்தால் பிழையொன்றும் இல்லையென எரிக்சோல் முடிவெடுத்துள்ளார் என்றே கருத வேண்டும்.

# தாட்சாயணி பிறந்த தைப்பூசத் திருநாளில்

# தெய்வத்தைப் போற்றித் துயர் நீங்குவோம்



சகல புவன சிருஷ்டிக் கடவுளாகிய பிரமதேவரின் மகன் தக்கன். இவன் இறைவனிடம் ஒரு அரிய வரங் கேட்கவிளைந்தான். எவருமே கேட்காத ஒப்பற்ற வரம் அது பரமபிதாவாகிய சிவன் எனக்கு மருமகனாகவும் அம்மைபார்வதிதேவி எனக்கு மகளாகவும் ஆக வேண்டும். இதுவே தக்கனுடைய வரம்.

### தாட்சாயணி அவதாரம்

இவ்வுலகில் எல்லா வரங்களையும் பெற்றுக் கொண்டவன். மேலும மேன்மை பெற வேணடி சிவனை நோக்கி பல காலம் தவம் செய்து வந்தான். கருணைக் கடலாம் இறைவன் அவ்வாறே அருள கொடுத்தார். தக்சனுக்கு ஒரு பெண் பிள்ளை அவதரித்தது. அதற்குத் தாட்சாயணி எனப் பெயரிட்டான். தாட்சாயணி அவதரித்த நாளே தைப் பூசம் ஆகும்.

### அபிசார வேள்வி

தாட்சாயணியோ தக்க பருவமடைந்ததும் சிவபெருமான் அவளை வந்து திருமணஞ் செய்து கொண்டார். இதனால் சிவன் தக்கனுக்கு மருகனாயினார். ஆயினும் தக்கனுக்கு அடி மனத்தில் ஆணவம் தளைக்கத் தொடங்கியது. சிவன் எனக்கு மருமகன் தானே என்று தன்னுளளே செருக்கடைந்து. தாமொரு அபிசார வேள்வியினைச் செய்ய முனைகின்றான். அபிசார வேள்வியென்பது சிவனை ஒறுத்துச் செய்யும் ஒரு மத்திம வேள்வி. இவ் வேளவியில் சிவனுக்கு அழைப்பு விடுக்காமல் ஏனைய முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. இன்னும் முனிவர்கள் காந்தருவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

பிரமதேவரே இதனை முன்நின்று செய்கின்றார். வேளவியிலே சிவனுக்கான அவிப்பாகம் கொடுக்கவில்லை. ஏனைய தேவர்களுக்கு வழங்சப்பட்டது இறைவன் ஆணைப்படி திருநந்திதேவர் இவ்விடத்துக்கு அனுப்பப்பட்டார். நந்திதேவர் தோன்றி ''இந்த அபிசார வேள்வியைச் செய்கின்ற தக்கனுடைய தலை துண்டிக்கப்பட வேண்டும், தேவர்கள் இதில் கலந்து கொண்ட படியால் நூற்றெட்டு யுகம் சூராதி சூரர்களால்துன்பப்படக்கடவது'' எனச் சபித்து விட்டுச் சென்றார்.

## க குணரத்தினம்
வரணியூர்

### அழிவுப்பாதை

பிரமதேவர்யாகசாலையை விட்டகன்றார். தக்கனுக்கோ கோபம் கொழுந்து விட்டெரிந்தது. அடுத்த படியாய் தானே ஒரு யாகத்தைச் செய்ய முனைந்து, இதிலும் தேவர்களை மாத்திரம் அழைத்திருந்தான். தக்கனின் செருக்கு அவனின் அறிவைப் பறி கொடுத்து விட்டது. செய் நன்றியை மறந்து விட்டான். அழிவுப் பாதையைத் தேடி வினை கின்றான்.

தான் கொடுத்த வரத்தினால் இவ்வளவு செருக்கா தக்கனுக்கு எனக் கோபமடைந்த சிவபெருமான், காளியுடன் வீரபத்திரர் வடிவந்தாங்கி யாகசாலையை அழித்தார். தக்கன் சிரம் கொய்து அக்கினி குண்டத்திலே இடப்பட்டது. தேவர்கள் எல்லாம் அல்லோல கல்லோலப்பட்டு சத்தியலோகத்தையடைந்தனர்.

### கந்தபுராணம்

தேவர்கள் இந்த யாகத்தில் கலந்து கொண்டதனால், பின்னர் நூற்றெட்டு யுகம் காசிபனின் மைந்தர்களான அசுரர்களால் இன்னல்ப்படுகின்றமையும் இவற்றைப் பொறுக்க முடியாத தேவர்கள் இறைவனிடம் சரணடைய அமரர்க்கருள் புரிவது கருதிய இறைவன் தன் நெற்றிக்கண்ணில் இருந்து முருகனை அவதரிக்கச் செய்து தனது திருக்குமாரனாலேயே தேவர்களின் துன்பம் நீக்கப்படுகின்றமையும் கந்தபுராணம் கூறும் வரலாற்றில் கண்டோம்.

### தாட்சாயணியின் தயக்கம்

ஆனால் தாட்சாயணியோ தகப்பன் செய்யும் யாகத்துக்குக் கலந்து கொண்டாள். தகப்பன் சிவனை நிந்தித்தும் அவமதித்தும் செய்யும் வேள்வியைப் பார்த்தாள். உண்மையை உணர்த்தினாள், இறைவனே பரமபொருள் யாகத்துக்கு முதல்வர் அக்கினியே இறைவனின் வடிவம். இவ்வாறான வேளவி உமக்கு அழிவையே தரும் எனப்பலவாறு கூறினாள் தகப்பனோ கேட்காது செய்யத் தொடங்கினான் பொறுக்க முடியாத தாட்சாயணி அக்கினிக் குண்டத்தில் வீழ்ந்து சிவனையடைந்தாள்.

அபிசார வேள்வியில் தாட்சாயணி கலந்து கொண்டமையால் இறைவன் வெறுப்பாரோ என்றெண்ணி தயங்கினாள் ஐயனே! தங்களை அவமதித்துச் செய்யும் வேள்வியில் கலந்து கொண்டயான் எவ்வாறு உங்களுடன் இருப்பது. நிந்தனை மொழிகளைச் செவிமடுத்த நான் இக் கோபத்துடன் இருக்க மாட்டேன் என முறையிட்டார். இறைவனோ, நீ மீண்டும் என்னை அடையப் பெறுவாய்! இதற்காக நர்மதா ஆற்றில் ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலரிலே நீ வலம்புரிச்சங்காக இருந்து என்னை நோக்கித் தவம் செய்து கொண்டிருக்க தக்க தருணத்தில் யான் உன்னைத் திருமணம் செய்து கொள்வேன் என அபயங் கொடுத்தார்.

### மலையரசன் மகளானால்

இவ்வாறு வலம்புரிச் சங்காக சிவனை நோக்கித் தவம் செய்து கொண்ட தாட்சாயணி பர்வதராஜன் மகளாகப் பின் அவதரிக்கின்றாள். இமய மலையரசன் மகளே பார்வதி. பார்வதிதேவியைப் பரமேஸ்வரர் மணந்து கொண்டதாகப் புராணங்கள் கூறுகின்றது ஆகவே நாமும் ஆணவம், அகங்காரம், அதிகாரம் இன்றி நடுவு நிலைமையுடனும் நாநிலம் போற்றும் நற்பண்புகளைச் சிரமேற் கொண்டும் சிவன் அருள்பெற்று உய்வோமாக

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியல் கல்லூரிக்கு

# தெரிவான மாணவர்களின்விபரம்வெளியாகியது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியக்கல்வியல் கல்லூரிக்கு இவ்வாண்டு தெரிவான முதற்கட்ட மாணவர்களின் பெயர் விபரம் வெளியாகியுள்ளது.

அவர்களின் பெயர் விபரம் பாடரீதியாகவருமாறு;

### ஆரம்பக் கல்வி

எ. பிருந்தாபன் கொக்குவில், வீ. சசிக்குமார் சுன்னாகம் தெற்கு, என்.பாரதி குருநகர், எஸ். பி. சிவகரன் உடுவில் தெற்கு,வீ.பி. சசிகுமார் நீர்வேலி தெற்கு, ஏ. டைசி நவாலி தெற்கு,எஸ்.செல்வக்குமரன் மீசாலை தெற்கு, ரி. தவமோகன் இளவாலை, கே. துஷ்யந்தன் தனங்கிளப்பு ரி கலையரசன் சித்தன்கேணி எஸ். யோகரத்தினம் நாவற்காடு வரணி, கே. நந்தகுமார் சரமபைக் குறிச்சி வரணி எஸ். நவகாந்தன், திருநெல்வேலி, எஸ். சசீந்திரன் டச்சுவீதிஅளவெட்டி,எஸ். சுரேஸ்குமார் சண்டிலிப்பாய், எஸ். சிவராஜாசுழிபுரம், ரீ.மயூரா காங்கேசன்துறை, பீ. ஜெயனேஸ்வரி மிருசுவில். எஸ். சுபாநந்தினி கோவில் வீதி நல்லூர்,வீ.கேதீஸ்வரிவட்டுக்கோட்டை, ஜீ.எவ்.துஷ்யந்தி நவாலி தெறகு, என். எஸ். கௌசினி சங்கானை. எஸ். சிவதாரணி சண்டிலிப்பாய், எஸ். தனவந்தி அச்சுவேலி, எஸ். ஸ்ரீலக்சுமி சுழிபுரம். எம். நந்தினி சாவகச்சேரி, எம் சசிகலா மட்டுவில் தெற்கு. எஸ். அகிலினி கொக்குவில், வீ. விஜயமலர் அராலி தெற்கு. கே. நாகேஸ்வரி அராலி தெற்கு.

### சங்கீதம்

இயூஜின் மசனற் வவுனிக்குளம், ஆர். ரஜித்தா சங்கானை, ரி.சுஜித்தா வரணி, எஸ். பிறேமா வரணி, எஸ். சிவாஜினி முல்லைத்தீவு, ஏ. தனுஜா மட்டக்களப்பு, ஜீ. ரி.ஜே நிலுஜா பெரியகல்லாறு, பி. அபிராமி உடுப்பிட்டி, ஆர். விஜயலக்சுமி கிளிநொச்சி, எஸ். கலையரசி வரணி.

### நடனம்

ரி. தயாபரன் பாரதிகிராமம் ரி. சசிரேகா வவுனியா, ரி. தர்சனா மட்டக்களப்பு, எம். பிறேமலதா மட்டக்களப்பு, கே. சுரோஜினி மட்டக்களப்பு, ரி. கமலேஸ் மட்டக்களப்பு, டீ. கீதாஞ்சலி மட்டக்களப்பு, பி. சஸ்தூரி வவுனியா, ரி. ஜெயசிறி சாவகச்சேரி.

### சித்திரம்

ஆர். ஜீவராஜ் முல்லைத்தீவுஏ.லோகானந்தம் மட்டக்களப்பு எஸ். கருணாகரன் வவுனியா, ஜீ.ஏ. ஞானராஜ் வவுனியா எஸ். மகேசன் அக்கரைப்பற்று, வீ. சுஜீவ் கற்பிட்டி, எம். எம். ஹமீலா புத்தளம், எம். எஸ் ஜே. முறிஸ்டா புத்தளம், எம்.எம் ஹலீமா புத்தளம்;

### விஞ்ஞானம்

எஸ். கஜேந்திரன் கோப்பாய்தெற்கு, ரி செந்தில் குமரன் மாதகல் ,பீ.உமாகரன் மானிப்பாய் ,ஏ.கஜதீபன் கொக்குவில், எஸ்.கார்மேகவண்ணன் புலோலி கே. சந்திரகுமார் ஊரெழு மேற்கு, ரி.பரமசோதி காரைநகர், ஏ.முகுந்தன் திருகோணமலை, வை.வசந்தன் அரியாலை ,ஏ.நிவசுரேஸ் மட்டக்களப்பு டி.நக்கீரன் கரவெட்டி ,என்.வேணுகோபன் மட்டக்களப்பு எஸ் சிவரஞ்சன் அக்கரைப்பற்று,ஏ.சியாமளபருன் தாவடி வடக்கு, என். முருகவேல் நயினாதீவு

ஜி. லதா யாழ்ப்பாணம் எம் தேகினி 'மகேஸ்வரா வாசா' வட்டு மேற்கு

எஸ். சுபாசினி நவாலி வடக்கு. கே. திருச் செல்வி திருநெல்வேலி, எஸ் எம் சர்மிலா உரும்பிராய், ஜே. தாரணி யாழ்ப்பாணம், எஸ். சிவறூபி கொக்குவில், எம். ஜசிதா யாழ்ப்பாணம், வீ.விஜிதா நீர்வேலி மத்தி, கே. பாமினி நல்லூர், எஸ். நளாயினி சித்தன் கேணி, வீ.விஜிதா புலோலி மேற்கு, கே. செல்வி யாழ்ப்பாணம், டீ. வளர்மதி கொக்குவில், எஸ். சுபாஜினி காரைதீவு.

### கணிதம்

ரீ தயாபரன் புலோலி பருத்தித்துறை, கே பிரதீபன் நவாலிதெற்கு, வி பாலமுரளி சுன்னாகம், பி. துசிகாந்தன் மாசார்,பளை, வி. செந்தூரன் தெல்லிப்பழை எம். இராஜசேகர் கல்முனை, ஆர் ரஞ்சித் சுதுமலைதெற்கு, வி. குகநாதன் மாதகல், எஸ். திணேஷ் வவுனியா,ரி. ரஞ்சன் திருநெல்வேலி, எஸ். ரகுராம் நாயன்மார்வீதிநல்லூர், கே. பாலகுமார் சுன்னாகம், வி.

→ 2ஆம் பக்கம் பார்க்க

மங்கையர் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள
**நியூ நகுலா ஜுவல்லறி**
74, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
[கி-1453]

# பத்திரிகையாளர் திருச்செல்வம்
# கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்
## விளக்கமறியலில் வைக்க உத்தரவு

பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பத்திரிகையாளர் திருச்செல்வம் கொழும்பு நீதவான் நீதி மன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்ட போது அவரைவிளக்கமறியலில்வைக்குமாறு நீதவான் உத்தவிட்டார்.

பத்திரிகையாளர்திருச்செல்வம் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளானமை தொடர்பாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரும், யாழ் மாவட்ட எம்பியுமான அ. விநாயகமூர்த்தி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறையிட்டதைத்தொடர்ந்து இவ்விசாரணை நேற்றுநடைபெற்றது.

மனிதஉரிமை ஆணைக்குழுத்தலைவர் பாயஸ்முஸ்தபா முன்னிலையில் நடைபெற்ற இந்த விசாரணையின் போது அங்கு ஆஜரான பயங்கரவாத புலனாய்வுப்பிரிவு பணிப்பாளர் எஸ்.பி. விக்கிரமசிங்கா தெரிவிக்கையில், குறிப்பிட்டசந்தேகநபர்தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார் எனவும் இதனால் அவருக்கெதிராக சட்டநடவடிக்கைஎடுக்கப் படுவதாகவுமதெரிவித்தார்.

திருச்செல்வத்தின் கைது தொடர்பாக சட்டமாஅதிபர் தான் தொடர்புகொண்டிருப்பதாகவும் அவரை விடுதலை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் அ. விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

இதேவேளை திருச்செல்வத்தின விபரம் தொடர்பாக பருத்தித்துறைபிரதேசசபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரனை கொழும்பிலிருந்துவந்த குற்றப் புலனாய்வுப்பிரிவினர் விசாரித்துள்ளதாகவும் தெரியவருகிறது. (ம)

---

**குழப்புவ..**

சந்திப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இச் சந்திப்பின் போது சமாதான முயற்சிகள் கனிந்து வரும் வேளையில் பேச்சுக்களைக் குழப்பாமல் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இரு கட்சித் தலைவர்களையும தமிழ்த் தலைவர்கள் கோரவுள்ளதாக தமிழ்க் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறவுள்ளசமாதானப் பேச்சுவார்த்தையை ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் தங்களது எதிர்ப்புநடவடிக்கைகள் மூலம் குழப்புவார்களானால் அது சமாதானத்தை பின் தள்ளுவது மட்டுமல்லாமல் பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்துமெனவும் தமிழ்க்கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (வ)

---

**தனியார்..**

தனியார் வைத்தியவைத்தியசாலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டமொன்றைக் கொண்டுவர சுகாதார அமைச்சர் தீர்மானித்துள்ளார். இதுதொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கென அரசாங்கத்துறை மற்றும் தனியார் துறையினரைக் கொண்ட விசேட குழுஒன்றையும் அமைக்கநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ந-4)

---

**யாழ் மன்னார்---**

ஆயர் அதிவண. இராயப்பு யோசப்பு கருத்துத்தெரிவிக்கையில், தெரிவித்திருப்பதாவது,

சமயப்பணியில் ஈடுபட்டிருக்கும் நாம் நாட்டில் யுத்தம் முடிவிற்கு வந்து சமாதானம் 'ஏற்படுவதற்கும் பாடுபட வேண்டியுள்ளது.

ஜனாதிபதிசந்திரிகா சுதந்திர தின கொண்டாட்ட வைபவ உரையின் போது வெளிக்காட்டிய நல்லெண்ண வெளிப்பாட்டினை புலிகளின் உயர்மட்டத் தலைவர்களைச் சந்திக்கும் போது எடுத்துக் கூறியுள்ளோம்.

இதேவேளை நாம்கொழும்பில் தங்கியிருந்த போது ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்திருந்த மகஜரில் யுத்தத்தைத் தொடர்ந்து நீடிக்காமல் அதனை முடிவுக்கு கொண்டு வந்து பகைமைகளைப் போக்க வேண்டும் என்றும், பொது மக்கள் பாதுகாப்பாக போக்குவரத்தை மேற்கொள்ளக் கூடிய வகையில் யாழ்ப்பாணம், கொழும்பு போக்குவரத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றும், மன்னார் குறிகாட்டுவான் பாதையில் படகுச் சேவைஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்றும், கோரப்பட்டுள்ளதை புலிகளுக்கும் சுட்டிக் காட்டப் போவதாகத் தெரிவித்துள்ளனர். (ம)

---

**விடுதலைப் --**

வந்த நோர்வேயின்சமாதான தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் உடன் ஜனாதிபதி சந்திரிக்க குமாரதுங்க மற்றும் வெளிவிவகாரஅமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோர்விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது தொடர்பாகவே கலந்துரையாடினரென்றும் அவ் வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

**லாலாவின்**
**அதிஷ்ட சீட்டிழுப்பு**
28-2-2001 ரிக்கற் 10/- ரூபா மட்டும். பவுண் நாணயங்களும் விலை உயர்ந்த சாறிகளும் பரிசாக வழங்கப்படும்.
**லாலா சோப் தொழிற்சாலை**
**அச்சுவேலி.**
(கி/1464)

---

**புலிகளின்**

வழங்கும் நாடுகளில் யப்பான் அதிகளவு நிதி உதவிகளை வழங்கி வருகிறது. இதனடிப்படையில் இலங்கையில் சமாதானம் மலருமானால் அது எமக்கு பெரு விருப்பமாக இருக்கும் என்றார்.

யப்பான் தூதுவர் தெரிவித்த கருத்துக்களுக்கு தமிழ்த் தலைவர்கள் யுத்த அனர்த்தத்தால் யாழ்ப்பாணம் அழிந்து போயிருப்பதையும் அதனைப் புனரமைப்புச் செய்து நாட்டில் சாந்தியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்று யப்பான் தூதுவரிடம் தமிழ் கட்சித் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யப்பான் தூதுவருடன் இடம் பெற்ற சந்திப்பின் போது மனோகனேசன் யாழ் மாவட்ட எம் பி அ.விநாயகமூர்த்தி கலாநிதிந.குமரகுருபரன் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ரவிராஜ் அஷ்ரப் அலிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ)

---

**புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்**

கடந்த மாதம் 16ம் திகதி கிளாலிப் பகுதியில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில்

- கப்டன் ஆனந்தி (எலபேன் கவிஸ்ரா) மன்னார்
- 2ம் லெப். சிலம்பரசி (தர்மலிங்கம் ரத்திக்கா) நெடுங்கேணி
- சங்கீதா (கந்தையா கவிதா) யாழ்ப்பாணம்
- கப்டன். தர்சினி (தனபாலசிங்கம் விஜிதா) யாழ்ப்பாணம்

ஆகிய போராளிகள் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)

## சந்தைதிறப்பு

குளப்பிட்டிச் சந்திக்கருகில் புதிதாக அமைக்கப்பட்ட கொக்குவில் பொதுச்சந்தை இன்று காலை நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜனினால் திறந்து வைக்கப்படும். (இ)

---

**வன்னியில்...**

வரை இடம் பெற்றது.

ஆயிர்க்கணக்கான மாணவர்கள் பொதுமக்கள் கலந்து கலந்து கொண்ட இப்பேரணியின் முடிவில் பொதுக் கூட்டமொன்றும் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் வெளியிடப்பட்ட பொங்கு பமிழ் அறிக்கை வாசிக்கப் தட்டது. (இ)

---

**அனுருத்த...**

மீதான விசாரணைக்காகவே மேற்படிபன்னிரண்டுபாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நீதிபதி கே.குலத்திலக விசாரணைக்குவருமாறு அழைப்பாணை அனுப்பியுள்ளார். (இ)

---

## பாசையூர் சந்தை
## அறிவித்தல்

பாசையூர் மீன்சந்தை இயங்குவதற்கு கடந்த 3ந்திகதி (சனிக்கிழமை) முதல் பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

சந்தைக் கட்டடத்தின் திருத்தவேலைகள் நடைபெற்று வருவதால் எதிர்வரும் 10ந் திகதி (சனிக்கிழமை) முதல் மேற்படி மீன்சந்தை இயங்குமென்பதை அறியத்தருகின்றோம்.

பாசையூர் அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்கம், எம். தவப்பிரகாசம் (தலைவர்)

**ஸ்ரீ செல்வா**
(யாழ்ப்பாணம்)
சத்தியராஜ், ரோஜா, வடிவேல், விவேக் நடித்த
லூட்டி
10-30 2-30
(ப. நே)
CD பிரதி

**DISH ANTENNA விற்பனைக்கு**
1. 8' DISH Antenna
2. Satallite Receiver
Model: Alfa Gold - 730
(Auto Power)
Jaffna Technical Institute
52/1 Stanly Road, Jaffna.

கிழமை) முதல் மேற்படி மீன்சந்தை இயங்குமென் பதை அறியத்தருகின்றோம்.

பாசையூர் அந்தோனியார் கடற்றொழிலாளர் சங்கம், பாசையூர்.

எம். தவப்பிரகாசம் (தலைவர்)

(கி-1469)

ஹூட்டி
10-30 2-30
(ப. நே)
CD பிரதி
புதிய வெளியீடு

(கி/1943)

Jaffna Technical Institute
52/1 Stanly Road, Jaffna.

(C/1461)

## தைப்பூஷ திருநாளில் மங்களம் பொங்கிட வாழ்த்துகிறோம்.

தைப்பூஷ நாளில் புதுப்பொலிவு காணும் உங்கள் வாழ்வின் மங்கள, நிகழ்வுகளை, மறக்கமுடியாத நிகழ்வுகளை என்றும் பசுமையாக உங்கள் நெஞ்சங்களில் நிலைக்க வைத்திடும் படியாக அதி நவீன கருவிகள் கொண்டு சிறந்தமுறையில் ஒளிப்பதிவு செய்திடவும் சிறந்த தொழில்நுட்பம் மூலம் காட்சிகளை அழகாகப் புகுத்தி இங்கிருந்துகொண்டே முழு உலகையும் வலம்வரும் நினைவுதனைப் பெற்றிடவும் மற்றும்

**மணப்பந்தல் ஸ்ரூடியோ சேவைகளுக்கும்**

**நீங்கள் நாடவேண்டிய இடம்**

# மேகாஸ் வீடியோ அன் ஓடியோ

உரிமையாளர் *N. S.* **இரவீந்திரன்**

23, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்,

அரியாலை கிளை:
494, கண்டி வீதி
தபாற்கட்டைச் சந்தி
அரியாலை, யாழ்ப்பாணம்

(கி-1462)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.